பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 25 வியாழக்கிழமை (09.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 203

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

யாழ்.மாவட்டச் செயலகத்தில்

## உத்தியோகத்தர் மீது வாள்வெட்டு தாக்குதல்

**பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்றுக் காலை துணிகரம்**

*(யாழ்ப்பாணம்)*

பாராளுமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டு பலத்த பாதுகாப்புச் சூழலில் இயங்கி வரும் யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாக இனம் தெரியாத குழுவினர் மாவட்டச் செயலக உத்தியோகத்தர் ஒருவர் மீது நேற்றுக் காலை வாள் வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.



பாதுகாப்புத் தேடி மாவட்டச் செயலகத்தினுள் ஓடிய குறித்த உத்தியோகத்தர் மீது அங்கும் கலைத்துச் சென்று கொடூரத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

*(23ஆம் பக்கம் பார்க்க)*

ஆடி அமாவாசை தினத்தில்

## கடலோர பிரதேசங்களில் பிதிர்க்கடன்களை செலுத்த

**அமைச்சரவை அனுமதி**

(யாழ்ப்பாணம்)

ஆடி அமாவாசைத்தினத்தை அனுஷ்டிப்பவர்கள் தமது பிதிர்க் கடன் 23

மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான

## மின்சாரக் கட்டணங்களுக்கு அதிகப்படியான சலுகை

**மகிந்த அமரவீர அறிவிப்பு**

(கொழும்பு)

மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான மின்சார கட்டணங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு கூடுதல் சலுகைகளை வழங்கி பாவனை 23

## வன்முறையுடன் தொடர்புடைய இருவர் மானிப்பாயில் கைது

(யாழ்ப்பாணம்)

வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்களில் இருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் பொலிஸார் நவாலியில் நேற்று மாலை சுற்றிவளைப்பு நடவடிக்கையை முன்னெடுத்தபோது, அவர் 23

# வீடு வீடாக வேட்பாளர்கள் வாக்குக் கேட்கத் தடை

## தேர்தல்கள் ஆணைக்குழு புதிய கட்டுப்பாடு



(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்வதற்கு, தேர்தல்கள் ஆணைக்குழு புதிய தடை விதித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைக் கருத்தில் கொண்டு நடத்தப்படும் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் குறித்த விதி முறைகளை தேசிய தேர்தல் 23

தரம் 5 மாணவர்களுக்கான **புலமைப்பரிசில்** மாதிரி வினாத்தாள் உள்ளே

வெடி விபத்தில் படுகாயமடைந்த

## முன்னாள் போராளி உயிரிழப்பு

(முறுகண்டி)

நாட்டு வெடிபொருள் தயாரித்தபோது ஏற்பட்ட வெடிவிபத்தில் படுகாயமடைந்த முன்னாள் போராளி ஒருவர் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

இதில் இயக்கச்சி 23

## தமிழர்களுக்கு வாழும் உரிமை போதும் அதிகாரப் பகிர்வு தேவையில்லை

**ராவணாபலயவின் செயலாளர் இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர்**

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு வாழும் உரிமை இருந்தால்போதும் அதிகாரப் பகிர்வு ஏதும் அவசியமில்லை என ராவணாபலய அமைப்பின் பொதுச் செயலர் இத்தே கந்த சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தியா 23

## கஞ்சா, கொரோனாவுடன் வடக்கில் போராடுகின்றோம்

**மக்களுக்கு சமூக பொறுப்பு தேவை**
**கடற்படை ஊடகப் பேச்சாளர் இசுறு**

(யாழ்ப்பாணம்)

கஞ்சா மற்றும் கொரோனாவுடன் வடக்கில் கடற்படை மல்லுக்கட்டி போராடுகின்றது. வடக்கு மக்கள் சமூக பொறுப்புடன் நடந்து 23

## முல்லையிலும் பல்கலை

(கொழும்பு)

முல்லைத்தீவில் புதிய பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் இடம்பெற்று வருவதாக, பல்கலைக் 23

## அல்வாயில் வாள்வெட்டு நால்வர் படுகாயம்

(கரணவாய்)

வடமராட்சி அல்வாய்ப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் 4 பேர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள 23

## பாராளுமன்றத் தேர்தல் - 2020

யாழ். தேர்தல் மாவட்டம்



தமிழ்த் தாயின் தவப்புதல்வா!
தமிழ் மக்களின் நம்பிக்கையின்
நட்சத்திரமே!!

X 10 X

சிவஞானம் சிறீதரன்

அவர்களை ஆதரித்து
வெற்றிபெறச் செய்வோம்.

தமிழ் மண்ணின் மீதும்,
தமிழ் மக்கள் மீதும் அடங்காப் பற்றாளா!
சுயநலமற்ற கண்ணியமான
அரசியலுக்கு

(017)

**க. தர்மலிங்கம் J.P**
முன்னாள் உப தவிசாளர்
உறுப்பினர்
வலி. கிழக்கு பிரதேச சபை

**க. இராசதுரை**
பொறுப்பாளர்
சிவசங்கரபண்டிதன் ச.ச.நிலையம்
நீர்வேலி.


# வெளிமாவட்டத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் கைது!

## வெற்றிலைக்கேணியில் சம்பவம்

(கரணவாய்)

தடைசெய்யப்பட்ட சுருக்குவலைகளை பயன்படுத்தி மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருந்த வெளி மாவட்டத்தை சேர்ந்த 10 மீனவர்கள் யாழ். மாவட்ட நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி வெற்றிலைக்கேணி பகுதியில் வெளி மாவட்டத்தை சேர்ந்த தொழிலாளர்கள் மீன் பிடிப்பதாக நீரியல் வள திணைக்களத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதனை தொடர்ந்து நேற்று புதன் கிழமை (08) பிற்பகல் யாழ் மாவட்ட நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளும், கடலோர காவல் படையினரும், வெற்றிலைக்கேணி பகுதியை சேர்ந்த கடற்தொழிலாளர்களும் இணைந்து வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி மீன் பிடி தொழிலில் ஈடுபட்டிருந்த இரண்டு படகுகளை சுற்றி வளைத்து பிடித்து உள்ளனர்.

இதில் இரண்டு படகுகள், பத்து சிலிண்டர்கள் மற்றும் சுருக்குவலை என்பவற்றுடன் மன்னார், கற்பிட்டி மற்றும் புத்தளம் பகுதிகளைச் சேர்ந்த 10 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.(ம-3,60,64,109)

# சங்குப்பிட்டியில் விபத்து மூன்று பேர் படுகாயம்

(சாவகச்சேரி)

சங்குப்பிட்டி பாலத்திற்கு அருகாமையில் நேற்று புதன்கிழமை இரவு 7.45 மணியளவில் டிப்பர் வாகனமும் முச்சக்கரவண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் முச்சக்கரவண்டியில் பயணித்த கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் படுகாயமடைந் துள்ளனர்.

இதில் ஆனந்தபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த 24வயதான செல்வகுமார், 25 வயதான பிரியதர்சன் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த 22வயதான த.டர்சிகன் ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்குஅனுப்பிவைக்கப் பட்டுள்ளனர். விபத்தில் டிப்பர் வாகனம் தடம்புரண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது (ம-03, 30,33,100)

# மரண அறிவித்தல்



## துரைராசா லோகேஸ்வரி

மானிப்பாய், பட்டினசபை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா லோகேஸ்வரி புதன்கிழமை (08.07.2020) நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைராசாவின் அன்பு மனைவியும் தபேந்திரன் (வேந்தன்), ஜீவானந்தன் (அதிபர் - யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை), கஷேந்திரன் (ஆசிரியர் - மு/ஐயன்கன்குளம் மகாவித்தியாலயம், துணுக்காய் - கொள்கை பரப்புச் செயலாளர், ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம்), லோகபமிலன் (சுகாதார உதவியாளர், யாழ். போதனா வைத்தியசாலை), மேரிபமிலினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், சங்கானை) ஆகியோரின் பாசமிகு தாயும் கனிஸ்ரா, சஞ்சீவன் (தொழிநுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு மாமியும் கஜானிஹா, பிரீத்திஹா, டர்சித் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற நாகேந்திரம் (தறுமு), விமலாதேவி (தேவி), றதீனா (ராசாத்தி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2020) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பட்டினசபை வீதி,
மானிப்பாய். (3246)

தகவல்:- குடும்பத்தினர்
077 500 0644


## நாடாளுமன்ற தேர்தல்-2020

(யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்)

"மக்களின் ஆணையே எமக்குத் தேவை
மாற்றத்தைப் பெற்றுத்தருவது எமது
பொறுப்பு"



இலக்கம் 05
**டக்ளஸ் தேவானந்தா**
(செயலாளர் நாயகம் -
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)



**ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்**
**(ரங்கன் தோழர்)**
இலக்கம் 01
(பருத்தித்துறை பிரதேச சபை
முன்னாள் தவிசாளர்/ கட்சியின்
யாழ்.மாவட்ட உதவி நிர்வாக
செயலாளர்)



**முடியப்பு றெமீடியஸ்**
இலக்கம் 07
(பிரபல மனித உரிமைகள்
சட்டத்தரணி/ யாழ்.மாநகர
சபை உறுப்பினர்)

வாக்களிப்பீர்...
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
(ஈ.பி.டி.பி)

(C-024)

X

# தேர்தல் பிரசார நடவடிக்கைகளை அரச நிறுவனங்களில் மேற்கொள்ளத்தடை

## மகிந்த தேசப்பிரிய அறிவிப்பு

(கொழும்பு)

**எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை அரச அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் மேற்கொள்வது முற்றாக தடை செய்யப் பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.**



தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அரச அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் இடம் பெறுவதாக பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில் இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, மாகாண சபை அலுவலகங்கள், அரச பாடசாலைகள், உள்ளூர் அதிகார சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் வசமுள்ள நிறுவனங்களில், தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனங்களில் துண்டுப் பிரசுரங்களை பகிருதல், வாக்குகளை இரந்து கேட்டல் மற்றும் கூட்டங்களை நடத்துவதிலிருந்து தவிரத்துக் கொள்ளுமாறு அரசியல்வாதிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் தொழிற்சங்க செயற்பாட்டாளர்களிடம் தேர்தல்கள் ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

அத்துடன், குறித்த நிறுவனங்களில் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பது, நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் உப அலுவலகங்களின் தலைவர்களின் பொறுப்பாகும் என குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-4)

# கட்டாரில் கொலை செய்யப்பட்ட குடும்பத்தினரின் சடலங்கள் நாட்டிற்கு

## சந்தேக நபருக்கு வலைவீச்சு

(கொழும்பு)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் மகள் கட்டாரில் கொலை செய்யப்பட்ட நிலையில், அவர்களின் சடலங்கள் நேற்று முன்தினம் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டன.

இந்த சம்பவத்தில் 59 வயதுடைய யோகநாதன் மகேந்திரன் என்பவரும் 55 வயதுடைய அவரது மனைவி ஷியாமலி யோகநாதன் மற்றும் 34 வயதுடைய அவர்களது மகள் சுதர்ஷனி யோகநாதன் ஆகியோரே கொலை செய்யப்பட்டனர்.

இந்நிலையில், உயிரிழந்த 34 வயதுடைய பெண்ணுடன் தொழில் நிமித்தம் கட்டார் சென்ற நபரொருவர் காதல் வயப்பட்டிருந்ததாகவும் பின்னர் இவர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக அவர் கூரிய ஆயுதத்தினால், தனது காதலி, அவரது தாய் மற்றும் தந்தையை கொலை செய்ததாகவும் கொலை செய்யப்பட்ட பின்னர் அந்த நபர் நாடு திரும்பியதாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

சந்தேக நபரைக் கண்டுபிடிக்க விமான நிலைய பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# நாட்டிலுள்ள அனைத்து சிறைகளிலும் கைதிகளை பார்வையிடத் தடை

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் கைதிகளை பார்வையிட செல்லும் வெளியாட்கள் உட்செல்ல தற்காலிகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலை சிறைச்சாலைகள் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள கைதியொருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்தே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-4)

# ரூபெல்லா நோயைக் கட்டுப்படுத்திய முதல் இரண்டு நாடுகளில் இலங்கை!

(கொழும்பு)

உலக சுகாதார அமைப்பின் வடகிழக்கு ஆசிய பிராந்திய நாடுகளில் ரூபெல்லா மற்றும் அம்மை நோயை ஒழித்த முதல் இரண்டு நாடுகளாக இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் பெயரிடப்பட்டுள்ளன.

மூன்று வருடங்களினுள் ரூபெல்லா அல்லது அம்மை நோயாளர் ஒருவரேனும் இனங்காணப்படாவிட்டால் குறித்த நாடு குறித்த நோய்கள் இரண்டையும் ஒழித்த நாடாக உலக சுகாதார அமைப்பால் பிரகடனப்படுத்தப்படும்.

மாலைதீவில் இறுதியாக கடந்த 2009 ஆம் ஆண்டு அம்மை நோயாளர் ஒருவர் பதிவாகியிருந்த நிலையில் கடந்த 2015 ஆம் ஆண்டு ரூபெல்லா நோயாளர் ஒருவர் பதிவாகியிருந்தார்.

இதேவேளை, நாட்டில் கடந்த 2016 ஆம் ஆண்டு இறுதியான அம்மை நோயாளர் பதிவான நிலையில் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ரூபெல்லா நோயாளர் ஒருவர் இனங்காணப்பட்டதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ-4)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# பூரணமற்ற 38 கோப்புகள் திருப்பியனுப்பப்பட்டன

(கொழும்பு)

ஏப்ரல் 21 இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் தொடர்பிலான விசாரணைகளின், அடிப்படையிலான மேலும் 38 கோப்புகளை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய பொலிஸ்மா அதிபருக்கு திருப்பியனுப்பப்பட்டதாக அரச சட்டத்தரணி நிஷரா ஜயரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த விசாரணை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தொடர்பான கோப்புகள், சட்ட மா அதிபரின் ஆலோசனைக்காக நாட்டின் பல்வேறு பொலிஸ் நிலையங்களினால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது.

இந்நிலையில், முழுமையற்றதாகக் காணப்படும் குறித்த கோப்புகளுக்கமைய கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாத வகையில் அவை காணப்படுவதால், அவற்றை திருப்பியனுப்ப சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதற்கமையவே 38 கோப்புகள் திருப்பியனுப்பப்பட்டன என அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் கடந்த மாதம் பூரணப்படுத்தப்படாத 40 கோப்புகள், சட்டமா அதிபரினால் பதில் பொலிஸ்மா அதிபருக்கு திருப்பியனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் 78 கோப்புகள் இவ்வாறு திருப்பியனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# முல்லைத்தீவு உட்பட ஐந்து மாவட்டங்களில் புதிய பல்கலைக்கழகங்களை நிர்மாணிக்க தீர்மானம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களில் புதிய பல்கலைக்கழகங்களை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் ஜனிதா லியனகே இதனைத் தெரிவித்துள்ளார்.

களுத்துறை, நுவரெலியா, மாத்தளை, அம்பாந்தோட்டை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் புதிய பல்கலைக்கழகங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக 5 பேராசிரியர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பெண்ணின் அடிப்படையில் மாணவர்கள் குறித்த பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படமாட்டார்கள் எனவும் கல்விப் பொதுத்தர உயர்தர பரீட்சை முடிவுகளின் பிரகாரமே உள்வாங்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களை நிர்மாணிப்பதற்கான காணிகளை மதிப்பிடு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-2)

# தமிழர்கள் அனைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்போடு இணைந்து பயணிப்போம்- சிறீதரன் அறைகூவல்

(பரந்தன்)

**எம் இனத்தின் இருப்பு கேள்விக்கு உட்படுத்தப்படுகிறது எனத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட வேட்பாளருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் கிளிநொச்சி செல்வாநகர் பிரதேசத்தில் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எம் இனத்தின் வாழ்க்கை என்பது அழிக்கப்பட்டுக் கொண்டு செல்கிறது. அந்த வகையில் எங்கள் இடங்களில் புத்த கோவில்கள், எங்கள் இட்ங்களில் இராணுவ முகாம்கள், நாளாந்தம் புதிய புதிய காவலரண்கள் போன்ற இந்த சூழ்நிலைகள் எல்லாம் எங்களைப் பொறுத்தவரை ஒரு ஆபத்தான சூழ்நிலைக்குள் தள்ளிக் கொண்டிருக்கிறது.

இந்தச் சூழலில் தான் எங்கள் பணிகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம்.

இப்போது தமிழர்கள் அனைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்போடு ஒன்றாக பயணிக்க வேண்டிய நேரம். அவ்வாறு ஒன்றாக பயணித்தால் மட்டுமே எதிர்வரும் காலங்களில் இந்த மண்ணில் ஏதாவது பேசக்கூடிய, அறுத்துறுத்து சொல்லக்கூடிய அல்லது எங்கள் உரிமைக்காக உரத்துக் குரல் கொடுக்கக்கூடிய வல்லமை எங்களுக்கு கிடைக்கும்.

காலமும் வரலாறுமே அதனை தீர்மானிக்க வேண்டும். எங்களை பொறுத்தவரை பல்வேறு சிதைவுகளும் பல்வேறு வீச்சு எல்லைகளும் காணப்பட்டாலும் அவற்றை எல்லாம் கடந்து பயணிக்கின்றோம் என்றால் அது உங்களுடைய பலம். மீண்டும் உங்கள் பேராதரவினை நாடி நிற்கின்றோம் என மேலும் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ஜெக்குமார், கரைச்சி பிரதேச சபையின் வட்டார உறுப்பினர், கட்சியின் வட்டார அமைப்பாளர்கள், மக்கள் எனப் பலரும், கலந்து கொண்டனர். (ஜ-4-312)

# எதையுமே சாதிக்க முடியாதவர்கள் மற்றவர்களும் சாதிக்கமாட்டார்கள் என்பது நகைப்புக்குரிய விடயமாகும்

## தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் கலாநிதி ஜீ.குணசீலன்

(மன்னார்)

மாற்றம் வேண்டும், மாற்றம் வந்தால் தான் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்கும் அல்லது நாங்கள் எங்களுடைய பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளலாம் என்று கூறிய கூட்டமைப்பு ஒருபோதும் இந்த இருபது வருடங்களுக்குள் தங்களுக்குள் ஒரு சரியான மாற்றத்தைக் கொண்டு வந்தார்களா? என வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளருமான வைத்தியர் ஞானசீலன் குணசீலன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,சந்தர்ப்பமே கொடுக்கப்படாமல் சுமார் 20 வருடங்களாக



எதையுமே சாதிக்க முடியாதவர்கள் மற்றவர்களும் சாதிக்க மாட்டார்கள் என்று கூறுவது ஒரு நகைப்புக்குரிய விடயமாக இருக்கின்றது.

எல்லாக் கட்சிகளுக்கும் சம அந்தஸ்தை வழங்க வேண்டும் என்ற தன்மையே காணப்படவில்லை.

அந்த ஜனநாயகம் அவர்களிடம் இருக்கவில்லை. ஆனால் அவர்கள் இன்று எதையும் சாதிக்காமல் மற்றவர்களிடம் வருபவர்கள் எதனை சாதிப்பார் என்று கேள்வி கேட்கிறார்கள்.

சந்தர்ப்பத்தை அளித்து பார்க்க வேண்டும்.ஆகவே நாங்கள் இந்த முறை கேட்பது மாற்றம் ஒன்று வேண்டும்.

மக்கள் கட்டாயமாக இன்னொரு சந்தர்ப்பத்தை எங்களுக்கு வழங்க வேண்டும். எங்களுக்கு சாதிக்கக்கூடிய வகைகளில் அதிகாரத்தை பெற்று தர மக்கள் முன்வர வேண்டும்.

ஆக மொத்தத்தில் கூட்டமைப்பு இவ்வளவு காலமும் தேசிய பிரச்சினை தொடர்பில் எதனையும் சாதிக்கவில்லை. மக்களின் அபிவிருத்தி தொடர்பாகவும் எதனையும் சாதிக்கவில்லை.

புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள் சம்பந்தமாகவும் நல்ல விடயங்களை அவர்களுக்காக பேசவும் இல்லை, செய்து கொடுக்க முயற்சிக்கவும் இல்லை என்பதே உண்மையாகும் என அவர் தெரிவித்தார். (ஜ-4-285)

தேர்தல் வியூகம்

# வடக்கு- கிழக்கு தமிழர்களின் பூர்வீகம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றே-சுகாஸ் கூறுகிறார்



(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பது தமிழர்களால் மட்டும் கூறப்படுகின்ற ஒரு விடயமல்ல. கடந்த கால சிங்கள- பௌத்த பேரினவாத அரசாங்கங்களினாலே கூட ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விடயமாக காணப்படுகிறது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் கனகரட்ணம் சுகாஸ் தெரிவித்தார்.

இறுதியாக இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையின் போது கூட வ்டக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகப் பிரதேசம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.தொல்பொருள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரரின்,''தமிழர்கள் வடக்கு-கிழக்கின் பூர்வீகக் குடிகள் அல்ல. வடக்கு- கிழக்கு தமிழர்களின் தாயகம் அல்ல. அதனை நிரூபிக்க அவர்களிடம் எந்த சான்றும் இல்லை'' என்ற கருத்துக்களுக்கு பதிலளிக்கும் விதமாகவே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி -செல்வா ஒப்பந்தம்,திம்பு பேச்சு வார்த்தைகளின் போதும் இவ் விடயம் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றும் தேரரின் இவ்வாறான கருத்துக்கள், கிழக்கிற் கான ஜனாதிபதி செயலணி என்ன நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது என சந்தேகப்பட வைக்கின்றது என்றும் இலங்கைத் தீவானது வரலாற்றுக் காலம் தொட்டு சிங்களவர் வாழ்ந்து வரும் பூமி என்று எல்லாவல மேதானந்த தேரர் கூறியிருந்தார் என சுட்டிக்காட்டியதுடன் தமிழர்களின்பூர் வீகம் தொடர்பாக யாருக்காவது தெளிவுபடுத்தல்கள் இருக்குமாயின் விவாதமொன்றை யும் மேற்கொள்ள தாம் தயாராகவுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் கனக ரட்ணம் சுகாஸ் தெரிவித்தார். (ஜ-8)

# எம் இனத்திற்கு தீர்வைப் பெற்றுத்தரக்கூடிய மாற்றத்தை பத்திரிகையாளர்கள் நிகழ்த்த வேண்டும்

## சயந்தன் வேண்டுகோள்



(சாவகச்சேரி)

போரிலே வீழ்ந்து கிடக்கின்ற எம் இனத்தை நிமிர்ந்து எழச் செய்கின்ற மற்றும் அரசியல் தீர்வைப் பெற்றுத் தரக்கூடிய ஒரு மாற்றத்தை பத்திரிகையாளர்கள் நிகழ்த்த வேண்டுமென முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினரும்,இலங்கை தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரிக் கிளைத் தலைவருமான கேசவன் சயந்தன் கேட்டுக்கொண் டுள்ளார். கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி கோவிற் குடியிருப்பு பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை யில்,

நாங்கள் எமது பத்திரிகையாளர்களிடம் எதிர்பார்ப்பது என்னவென்றால் போரிலே வீழ்ந்து கிடக்கின்ற எம் இனத்தை நிமிர்ந்து எழச் செய்கின்ற,அவர்களுக்கு ஓர் அரசியல் தீர்வைப் பெற்றுத் தரக்கூடிய ஓர் மாற்றத்தையும் எங்களுக்கு அரசியல் தீர்வு வரும் போது சிங்கள மக்கள் மனதில் மாற்றத்தை ஏற்படு த்தக்கூடிய அந்த மாற்றத்தை யும் ஏற்படுத்தித் தருவது ஆகும் என அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4-30)

# திருக்கோணேச்சரம் பறிபோகும் அவலநிலை

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் கஜேந்திரன் சுட்டிக்காட்டு

**(யாழ்ப்பாணம்)**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கட ந்த 40 ஆண்டுகளாக திருகோணமலையில் இருந்து இலங்கை அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி வந்ததன் விளைவானது இன்று திருக்கோணேச்சரம் கூட பறிபோகின்ற நிலைமையைத்தான் எட்டியிருக்கிறது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட வேட்பாளர் செல்வராசா கஜேந்திரன் சுட்டிக்காட்டினார்.**



கிழக்கு மாகாணத்திற்குரிய தொல்பொருள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் தமிழர்களின் புனித வணக்கஸ்தலமான கோணேச்சரம் என்பது கோகர்ண விகாரையே எனக் கூறிய கருத்துகளுக்கு பதிலளிக்கும் விதமாகவே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவிலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களின் வரலாற்றுப் பெருமைமிக்க வாழ்விடங்கள், மதஸ்தலங்கள் போன்றவற்றை தேசத்தினுடைய அடையாளங்களைத் தொடர்ந்து பேணுவதற்கும் அதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் சர்வதேச மட்டத்தில் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுப்போம்.

அதனைச் சாத்தியமாக்குவதற்காகத் தான் ஒற்றையாட்சியை நிராகரித்து தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான ஒரு அரசியல் தீர்வையும் வலியுறுத்தி வருகிறோம்.

இதனைச் சாத்தியமாக்குவதற்காக எல்லோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் ஒன்றிணைய வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஜ-8)

# நேர்மையான ஒரு சிலரையாவது நாடாளுமன்றுக்கு தெரிவுசெய்ய வேண்டும்

## அருட்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியத்திற்காக உழைக்கின்ற நேர்மையான ஒரு சிலரையாவது நாடாளுமன்றுக்கு இம்முறை தெரிவு செய்யவேண்டும் என வலியுறுத்தியுள்ள அருட்தந்தை லியோ ஆம்ஸ்ரோங், எமக்கு முன் இருக்கின்ற தார்மீகக் கடமையை சரியான முறையில் நிறைவேற்ற வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

பொதுத் தேர்தல் தொடர்பாக மக்கள் முன் உள்ள சவால்கள் குறித்து கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தலையொட்டி பெரும் மாயை ஒன்று எங்களைச் சுற்றி இருக்கின்றது. கட்சி, தேசியம், பிரதேசம், சாதியம் இவ்வாறு பல மாயைகளுக்கு ஊடாக தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய சூழல் உள்ளது.

நாங்கள் சிந்திக்க வேண்டும். யாருக்கு வாக்குப்போட வேண்டும் என்பதை பலரும் கேட்கின்றார்கள்.

யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை ஒவ்வொரு நலன் விரும்பியும் தேச விரும்பியும் சிந்திக்க வேண்டும்.

ஆகவே தமிழ் மக்கள் ஒரு தெளிவைப்பெறவேண்டும் என்பதை நாங்கள் சிந்திக்க தூண்டப்படுகின்றோம்.

இந்தத் தெளிவு என்பது தமிழ்த் தேசியத்திற்கான தெளிவாக இருக்க வேண்டும்.

ஆகவே நாங்கள் போடுகின்ற புள்ளடி எமது பெறுமதியானது. அதனை நேர்மையாக, நேர்த்தியாக செய்ய வேண்டிய கடமை ஒவ்வொருவருக்கும் உள்ளது.

எந்தக் கட்சி? எந்த நபர்? என்று தெரிவு செய்வதில் போராட்டம் உள்ளது.

கட்சி என்ற மாயைக்குள் சிக்கிவிடாது தமிழ்த் தேசியத்திற்காக உழைக்கின்ற நேர்மையான ஒரு சிலரை தெரிவு செய்ய வேண்டும்.

அவர்களுக்கு வாக்களிக்க முயற்சிப்போம். நிராகரிக்க வேண்டியவர்களை அவதானத்துடன் நிராகரிப்போம். தெரிவு செய்ய வேண்டியவர்களை அவதானிப்புடன் தெரிவு செய்வோம்.

எமக்கு முன் இருக்கின்ற தார்மீகக் கடமையை சரியான முறையில் நிறைவேற்ற நாமும் தெளிவடைவோம், அருகிலுள்ளவர்களையும் தெளிவடையச் செய்வோம்" எனத் தெரிவித்தார். (ஜ-4)



# பொறுப்பற்ற விதத்தில் கழிவுகளை வீசுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை

## யாழ்.மாநகர பதில் முதல்வர் மீண்டும் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரப் பகுதிகளில் பொறுப்பற்ற விதத்தில் கொட்டப்படும் கழிவுகளால் பொதுமக்கள் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுபவர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்க்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு யாழ்.மாநகர பதில் முதல்வர் தெரிவித்துள்ளார்.



இதேவேளை வடிகால்களில் உணவுக்கழிவுகள் கொட்டப்படுவதும் எமது பணியாளர்களால் இனங்காணப்பட்டுள்ளது.

உணவுக் கழிவுகள் துர்நாற்றம் வீசுவதற்கு ஏதுவாக அமைவதோடு சுகாதாரச் சீர்கேடுகளையும் ஏற்படுத்தும். இவ்விடயம் பதில் முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

யாழ். மாநகரின் மத்தியில் திண்மக் கழிவகற்றும் பணி காலையும் மாலையும் இடம்பெற்று வருகின்றது.

கழிவுகளைக் கண்ட இடங்களில் வீசாது உரிய முறைப்படி மாநகர சபையின் வாகனங்களில் ஒப்படைக்க வேண்டியது கடை உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்களது பொறுப்பும் கடமையும் ஆகும்.

எனவே இனி வருங்காலங்களில் கழிவுகளை உரிய முறையில் கையாளாமல் வடிகாலிற்குள்ளேயும் மற்றும் பொது இடங்களிலும் கழிவுகளை கொட்டுபவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கெதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எமது நகரை சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருப்பது அனைவரினது கடமையும் பொறுப்பும் ஆகும்.

அந்த வகையில் அனைவரது அர்ப்பணிப்பும் ஒத்துழைப்பும் அவசியம் என்று யாழ்.மாநகர பதில் முதல்வர் து.ஈசன் அறிவித்துள்ளார். (4-5)



கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதி ஸ்ரீ சிவ மாகாளி அம்மன் தேவஸ்தனம் (பழைய காளி கோவில்) மகா கும்பாபிஷேகம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் பெண் நோயியல் மற்றும் மகப்பேற்றுச் சிகிச்சைப் பிரிவிற்கு யாழ்ப்பாணம் பெனின்சுலா றோட்டறக்ட் கழகத்தினால் கொரோனா பரவலினைத் தவிர்க்கும் மூகமாக காலால் இயக்கி கைகழுவும் உபகரணத் தொகுதி அண்மையில் வழங்கப்பட்டது. (படம்:-குப்பிழான் செய்தியாளர்)



## தனியார் கல்வி நிறுவனங்கள்

# மாணவர் நலனில் அக்கறை கொள்வது அவசியம் வலி.கிழக்கு தவிசாளர் நிரோஷ் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தனியார் கல்வி நிறுவனங்கள் கற்றலுக்கான சுகாதார உட்கட்டமைப்பு வசதிகளைக்கொண்டவையாக இயங்குவது கட்டாயமானதாகும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

கொவிட்-19 வைரஸ் எச்சரிக்கைக்குப் பின்னர் வலிகாமம் கிழக்கிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களை வழிப்படுத்துவதற்கான கூட்டம் தவிசாளர் தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களில் அதிக மணி நேரத்தை செலவிடுகின்றதுடன் அதிகமான மாணவர்கள் ஒன்றுகூடும் இடங்கள்ாக தனியார் கல்வி நிறுவனங்கள் உள்ள நிலையில் அத்தனியார் கல்வி நிறுவனங்கள் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட மாணவர்களின் உடல்,உள ஆரோக்கியத்தை பாதுகாக்கும் நடைமுறைகளை மேற்கொள்வது அவசியமானதாகும்.

கல்விக்காக மாணவர்கள் ஒன்றுகூடுவதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ள போதும் கொரோனா தொடர்பான் எச்சரிக்கைகள் நடைமுறையில் இருக்கின்றன.

ஆகவே சரியான சுகாதார நடைமுறைகளுடன் சுகாதாரத் துறையினரின் ஆலோசனைக்கு அமையவே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-5)

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தி நோத்வே பமிலி மாட் (NORTHWAY FAMAILY MART) இன் அனுசரணையுடன் திருநெல்வேலி, சிவன் வீதி அக்னி இளைஞர் அணியின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை திருநெல்வேலி சிவன் வீதி ஜே/110 கிராம உத்தியோகத்தர் அலுவலக முன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (4-5-9)

# வெடி வெடித்தது இராணுவம்; அச்சத்தில் உறைந்தனர் மக்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -கச்சாய் வீதிப் பகுதியில் அமைந்துள்ள படை முகாம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு அடிக்கடி குண்டுச் சத்தம் மற்றும் துப்பாக்கி வேட்டுச் சத்தம் ஆகியன ஒலித்தமையால் பிரதேச மக்கள் அச்சமடைந்தனர்.

இரவு 8.30 மணியளவில் ஆரம்பமான குண்டுச் சத்தங்கள் இரவு 10 மணி வரை தொடர்ந்தது. இது தொடர்பாக இராணுவ தரப்பிடம் வினவிய போது தமது படைமுகாமிலுள்ள படைப்பிரிவொன்றின் 18 ஆம் ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு வானவில் வெடி வெடிக்க வைக்கப்பட்டு கொண்டாடப்படுவதாகவும் மக்கள் இதனால் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் தெரிவித்தனர். குறித்த குண்டுச் சத்தம் காரணமாக அப்பகுதி மக்கள் அச்சத்தில் இரவு முழுவதும் வீட்டுக்குள் முடங்கினர். (5-30)

# "யாழ் நகர் - 400" ஓவியப்போட்டி ஆக்கங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச கலாசார பேரவை 2021 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் நகரமாகி 400 ஆண்டுகள் நிறைவடைவதை சிறப்பிக்குமுகமாக யாழ்பாடி கலாசார மலர் - 5 இற்கான அட்டைப்படம் பெறுதல் தொடர்பாக "யாழ் நகர் - 400" எனும் தொனிப்பொருளில் ஓவியப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

கிடைக்கப்பெறும் ஓவியங்களிலிருந்து பரிசீலனைக்குழுவினரால் தெரிவு செய்யப்பட்டு முதலாம் இடத்தினைப் பெறும் ஓவியம் 2021 ஆம் ஆண்டில் வெளியிடப்படவுள்ள யாழ்பாடி கலாசார மலர் - 5 இற்கான அட்டைப்படமாக தெரிவு செய்யப்படுவதோடு மேலும் தரமான ஓவியங்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசில் மற்றும் சான்றிதழும் வழங்கப்படும் என்றும் மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசார பிரிவினரை தொடர்பு கொள்ளுமாறும் யாழ்.பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார். (4-5)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் இலத்திரனியல் கற்றல் மென்பொருள் தயாரிக்கும் அலகின் பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்யும் நிகழ்வு நேற்று புதன்கிழமை காலை யா/நல்லூர் ஆனந்தா வித்தியாலயத்தில் அமைந்துள்ள LMDM அலகில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், மேலதிக கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரஸ், கணக்காளர் ம.ஜெயக்குமார், தகவல் தொழில்நுட்பபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தர்மசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# முதன்முறையாக ஒரே பிரசவத்தில் இரண்டு குட்டிகளை ஈன்ற யானை

(கொழும்பு)

மின்னேரியா தேசிய பூங்காவிலுள்ள யானை ஒன்று இரண்டு குட்டிகளை ஒரே பிரசவத்தில் ஈன்றுள்ளது. இதனால் இலங்கையில் உள்ள வனவிலங்கு ஆர்வலர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இதுவே இலங்கையில் யானை ஒன்று ஒரே பிரசவத்தில் இரண்டு குட்டிகளை ஈன்றது முதல் தடவையாகும் என வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்தியர் தாரக பிரசாத் தெரிவித்துள்ளார்.

குறித்த குட்டிகள் பிறந்து மூன்று அல்லது நான்கு வாரங்களே இருக்குமெனவும் மின்னேரியா பூங்காவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

# குணமடைந்தோர் 1967

(கொழும்பு)

நாட்டில் நேற்று புதன்கிழமை மேலும் 12 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களில், 7 பேர் வெலிகந்த ஆதார வைத்தியசாலையிலிருந்தும் 3 பேர் காத்தான்குடி வைத்தியசாலையிலிருந்தும் 2 பேர் அங்கொடை தொற்று நோய் வைத்தியசாலையிலிருந்தும் பூரண குணமடைந்து வெளியேறியுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை ஆயிரத்து 967 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் 2 ஆயிரத்து 81 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதில் 103 பேர் நாடு முழுவதும் உள்ள 9 வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் 56 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான 11 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# நல்லொழுக்க செயலணியில் சிறைச்சாலை ஆணையாளர் நியமனம்

(கொழும்பு)



பாதுகாப்பான நாடு, நல்லொழுக்கமுள்ள மற்றும் சட்ட பூர்வமான சமுதாயத்தை கட்டியெழுப்ப நியமிக்கப்பட்ட ஜனாதிபதி பணிக்குழுவின் உறுப்பினராக சிறைச்சாலைகளின் ஆணையாளர் நாயகம் துஷார உபுல் தெனிய நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலாளர் கலாநிதி பி.பி.ஜெயசுந்தரவின் கையொப்பத்துடன் வெளியான வர்த்தமானி அறிவித்தலில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் - 1983 அவிட்டம் 01 ஆம் பாதம் 7இல் செவ்வாய் கி.பாவம் 36 3/4 (அரச உத்தியோகம்) மணமகனுக்கு பொருத்தமான அழகிய மணமகள் தேவை.
தரகர் தேவையில்லை.

தொடர்புக்கு: 0761212066

(3234)

# நாட்டிற்கு புறப்பட்ட 153 இந்தியர்கள்

(கொழும்பு)

இந்தியன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் சிறப்பு விமானத்தின் மூலமாக 153 இந்தியர்கள் நேற்றுக்காலை நாட்டிலிருந்து புறப்பட்டுள்ளனர்.

அதன்படி இந்தியன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான ஏ.ஐ -282 என்ற சிறப்பு விமானத்தினூடாக அவர்கள் காலை 9.50 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புதுடில்லி நோக்கிப் புறப்பட்டனர்.

நாட்டில் கட்டுமானம், தச்சர்கள் மற்றும் ஏனைய தொழில்களில் ஈடுபடும் குழுவினரே இவ்வாறு டில்லி நோக்கிப் புறப்பட்டுள்ளதாக விமான நிலைய செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை கட்டார், டோஹாவிலிருந்து அதிகாலை 1.45 மணியளவில் 23 இலங்கையர்கள் கட்டாரின் கியூ.ஆர் -668 என்ற விமானத்தின் மூலம் நாட்டை வந்தடைந்தனர். (ஜ-4)

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி

(மாவனெல்லை)

மாவனெல்லை - ஹெம்மாதகம பிரதேசத்தில் மின்சாரம் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த நபர் நேற்று விலங்குகளை வேட்டையாடுவதற்காக காட்டுக்கு சென்ற நிலையில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பற்ற மின் கம்பியில் சிக்கி மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நபர் 60 வயதுடையவர் ஆவார். குறித்த மின் கம்பிகளை காட்டில் பொருத்திய நபர் தொடர்பில் இதுவரையில் தகவல்கள் வெளியாகவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

# தேர்தலில் இருந்து விலகும் பாலித

(கொழும்பு)

தேர்தல் போட்டியிலிருந்து விலகப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட வேட்பாளர் பாலித தெவரப்பெரும தெரிவித்தார். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ஜ-4)

# போதைப்பொருள் தடுப்பு பணியக அதிகாரி கைது

(கொழும்பு)

போதைப்பொருள் மோசடி செய்பவர்களுடன் தொடர்புகளை பேணிய குற்றச்சாட்டில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்தில் இணைக்கப்பட்ட மேலும் ஒரு அதிகாரியை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு ராகம பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

போதைப் பொருள் மோசடிகளுக்கு உதவுவதன் மூலம், மில்லியன் கணக்கான வருமானம் ஈட்டிய குற்றச்சாட்டில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்தில் இணைக்கப்பட்ட அதிகாரிகள் குழு மீது சி.ஐ.டியினர் தற்போது சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: 13 ½ செவ் 4 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: தகுந்த வரன் சைவபோசனம் உடையவர் மட்டும்
தொ.இ: B/10926

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 1
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. தொழில்நுட்பவியலாளர் (தனியார்)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10932

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரோகினி 3
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: உத்தியோகம் அல்லது நன்றாக படித்த பெண்
தொ.இ: B/10933

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா: 31 ½ சூரிசெவ் 4 இல்
உயரம்: 166cm
தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் உள்ள மணமகள்
தொ.இ: B/10934

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூராடம் 2
கி.பா: 44½ செவ் 11 இல்
தகைமை/தொழில்: வெளிவாரிப் பட்டதாரி முன்பள்ளி ஆசிரியை
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர், தனியார் வங்கி உத்தியோகத்தர்
தொ.இ: G/10970

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2
கி.பா: செவ் 11 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பட்டதாரி பிரதேச சபை லிகிதர்
எதிர்பார்ப்பு: உயர் தனியார், அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன்
தொ.இ: G/10971

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 3
கி.பா: 16 ½ சூரிசெவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: G/10976

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: விசாகம் 3
கி.பா: 19 ½ செவ் 1 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: B.Sc Information Technology, Associate Software
எதிர்பார்ப்பு: உயர் தகைமையுடைய உயர் உத்தியோக மணமகன்
தொ.இ: G/10977

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# வீதி விபத்துக்களை தடுக்க அனைவரும் ஒன்றிணைவோம்

## கிளிநொச்சி வைத்தியசாலை பணிப்பாளர் வேண்டுகோள்

(முறிகண்டி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் மாதாந்தம் அதிகரித்து வருகின்ற வீதி விபத்துக்களையும் அதனால் ஏற்படும் மரணங்களையும் தவிர்ப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என கிளிநொச்சி வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் கெ.ராகுலன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் நேற்று விபத்துக்கள் தொடர்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலே இடம்பெறுகின்ற மரணங்களில் மூன்று வீதமான மரணங்கள் வீதி விபத்துக்களாலேயே இடம்பெறுகின்றன. அந்த வகையிலே கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்தவாரத்தில் மட்டும் மூன்று பேர் வீதி விபத்துக்களால் உயிரிழந்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டமானது வடக்கு மாகாணத்தின் மையப்பகுதியில் உள்ளதுடன், ஏ-9 நெடுஞ்சாலை குறுக்கெடுத்து செல்லும் ஒரு பகுதியாகவும் காணப்படுவதனால் தொடர்ந்தும் விபத்துக்கள் இடம்பெறுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் எவ்வாறு விபத்துக்களை குறைக்க முடியும் என்பது பற்றி மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஒன்றுகூடி பிராந்திய மட்டத்தில் தீர்மானங்களை எடுத்து அவற்றை ஆளுநருக்கு சமர்ப்பிப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். ஏ-9 வீதியில் மையப் பகுதியிலே இந்த வைத்தியசாலை அமைந்திருப்பதால் நாளாந்தம் விபத்துக்களால் ஏற்படுகின்ற காயங்கள், மற்றும் விபத்து தொடர்பான சிகிச்சைகளுக்காக பெருமளவானோர் இவ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர். விபத்துக்களில் பாதிக்கப்படுபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலே சிகிச்சை வழங்க வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. அதனையே இங்கு கடமையாற்றும் வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.



இந்த வைத்தியசாலையில் விபத்துப்பிரிவு இதுவரை இல்லை. அதனால் விபத்துப் பிரிவு என்பது மிக அவசர தேவையாக உள்ளது. அதே போன்று என்பு முறிவு சிகிச்சைப் பிரிவும் ஓரளவு வசதிகளுடனேயே இயங்கி வருகின்றது.

ஆனாலும்சிறந்த சேவையை வழங்கி வருகின்றோம். இந்த விபத்துக்களில் பாதிக்கப்படுபவர்களால் சத்திர சிகிச்சைக் கூடம் நிரம்புவதனால் ஏனைய நோயாளர்களுக்கான சத்திர சிகிச்சைகளை முன்னெடுப்பதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக வைத்தியசாலையிலே உள்ள மயக்க மருந்து நிபுணர்கள், சட்ட வைத்திய நிபுணர்கள், தோல் வைத்திய நிபுணர்கள், உளநல வைத்திய நிபுணர்கள், பொது வைத்திய நிபுணர் கள் என அனைவரும் தமது சேவைகளை கால நேரம் பாராது வழங்கி வருகின்றனர் எனக் குறிப்பிட்ட அவர், வீதி விபத்துக்களால் அண்மைய நாட்களாக மரண வீதங்கள் அதிகரித்து செல்வதுடன், அங்கவீனர்களாக்கப்பட்டும் வருகின்றனர். எனவே வீதி விபத்துக்களை தவிர்க்கும் வகையில் எதிர்காலத்தில் விழிப்புணர்வுகளை முன்னெடுத்துச் செல்ல உள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து இன்றுவரை 21 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்த அவர், இந்த மாதம் கடந்த 7 நாட்களில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன், 7 பேர் காயங்களுக்குள்ளாகினர் என்றும் அவர் தெரிவித்தார். வீதி விபத்துக்கள் தொடர்பில் பொதுமக்களும் அதிகாரிகளும் வாகனத்தை செலுத்துகின்றவர்களும் விழிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்த அவர், அதனால் மாத்திரமே விபத்துக்களை தவிர்க்க முடியும் எனவும் குறிப்பிட்டார். (5-100-312)

# கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுப்பு



(கண்டாவளை)

இலங்கையின் வட பகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஸார்ப் (SHARP) நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. இக்கண்ணி வெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2020 ஜூலை மாதம் 06 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும் ,கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் பதினொரு இலட்சத்து 76 ஆயிரத்து எண்பத்தைந்து சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 22 ஆயிரத்து 530 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை மற்றும்ஆனையிறவு பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(4-5-315)

# சுயாதீனமான தேர்தலுக்கு பொலிஸாரின் முழு ஒத்துழைப்பு

## யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் உறுதி

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலை சுயாதீனமாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கு பொலிஸாரின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் என யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஸ்சேனரட்ன உறுதிபடத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் தலைமையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாண பிரதி பொலிஸ்மா அதிபர், எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலை சுயாதீனமாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கு தேர்தல்திணைக்களத்துடன் இணைந்து பொலிஸார் செயற்படுவதற்கு தயாராக இருக்கின்றோம்.

அதாவது மாவட்ட உதவி தேர்தல் அலுவலகத்தால் வழங்கப்படுகின்ற பணிப்புரைக்கமைய எமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக மாவட்ட பொலிஸாருக்கு என்னால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் நாங்கள் தற்பொழுது சட்டவிரோதமாக ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள் மற்றும் தேர்தல் விளம்பர பதாகைகள் அகற்றல் மற்றும் தேர்தல் வன்முறையோடு சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அதற்கென நியமிக்கப்பட்ட பொலிஸ் அணியினால் அது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் எனத்தெரிவித்தார். (ஜ-5)

# கழன்ற பெட்டிகளை கைவிட்டு சென்ற கடுகதி புகையிரதம்

(நெளுக்குளம்)

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கடுகதி புகையிரதம் நேற்று அதிகாலை புகையிரத கடவையை விட்டு தடம்புரண்டதால் வட பகுதிக்கான புகையிரத போக்குவரத்து தடைப்பட்டது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

நேற்று அதிகாலை 5.50 மணியளவில் வவுனியா புகையிரத நிலையத்திலிருந்து கொழும்பை நோக்கிப் புறப்பட்ட கடுகதி புகையிரதம் காலை 6.15 மணியளவில் புனாவை பகுதியில் தண்டவாளத்தை விட்டு தடம் புரண்டு இரண்டு கிலோ மீற்றர் தூரம் புகையிரதப் பெட்டிகள் இழுத்து செல்லப்பட்டுள்ளன.

எனினும் புகையிரதத்தில் பயணித்த பயணிகள் எவருக்கும் எவ்விதமான பாதிப்பும் ஏற்படவில்லை. இச்சம்பவத்தினால் வடபகுதிக்கான புகையிரத போக்குவரத்திற்கு தடை ஏற்பட்டுள்ளதுடன் தடம் புரண்ட பெட்டிகளை புனாவை புகையிரதக் கடவையில் விட்டு விட்டு ஏனைய எஞ்சிய பெட்டிகளுடன் ஒரு மணி நேர தாமதத்தின் பின்னர் மீண்டும் கொழும்பை நோக்கிப்புறப்பட்டது.



இச்சம்பவம் இடம்பெற்ற பகுதிக்குச் சென்ற தொழில்நுட்பவியலாளர்கள் தடம் புரண்ட புகையிரதப்பெட்டிகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புகையிரத திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-250-299)

# வீதிகளைப் புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை



(முரசுமோட்டை)

புதுமுறிப்பு "சோலை நகர்" கிராமத்தில் பல வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. இவ் வீதியூடாக பயணிப்பதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அப் பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளதுடன் இவ் விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து வீதிகளை சீர் செய்யுமாறு கோரிக்கையும் விடுத்துள்ளனர். (4-5-318)

# உள்ளூராட்சி சபைகளின் பரிணாமம்

11

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர் – எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.





ஆரம்பத்தில் பிரதேச சபையாக ஆரம்பமாகும் உள்ளூராட்சி அலகை காலப்போக்கில் நகர சபையாகவும் பின்பு மாநகர சபையாகவும் தரமுயர்த்திப் பிரகடனம் செய்வதற்குரிய அதிகாரம் மத்திய உள்ளூராட்சி அமைச்சருக்கு உண்டு.

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த நிர்வாக அதிகாரம் மற்றும் மேற்பார்வை அதிகாரம் போன்ற பெருமளவு அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. எனினும், உள்ளூராட்சி சபைகளின் கட்டமைப்பு தொடர்பான விடயங்கள் தொடர்ந்தும் மத்திய அரசாங்கத்தின் கீழ் தக்க வைக்கப்பட்டுள்ளன.

மக்கள் பங்குபற்றுவதற்கு வாய்ப்புக்களை வழங்கல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இலங்கையில் உள்ளூராட்சி சபைகள் பொது நலன்கள் சார்ந்த துறைகளில், குறிப்பாக பொதுச்சுகாதாரம், கழிவகற்றல் போன்றவற்றிலும் சில சமூக சேவைகளி லும் ஈடுபட முடியும். பிரதேச மற்றும் நகர சபைகளை விட மாநகர சபைகளுக்கு மேற்படி விடயங்களை கையாள்வதில் அதிக அதிகாரம் உண்டு. எனினும், பிரதேச, நகர சபைகள் மக்களின் பங்க ளிப்புடன் கூடிய அபிவிருத்தி நடவடிக் கைகளில் கணிசமான செல்வாக்கை செலுத்த முடியும். உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான மேலே கூறப்பட்ட சட்டங்கள், சரத்துக்களை விட இலங்கைக்கான பொதுவான சட்டங்களையும் உள்ளூராட்சி சபைகள்

## உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரம் வழங்கல்




### உள்ளூராட்சி சபைகளின் நோக்கம்

உள்ளூராட்சி மட்டத்தில் நிர்வாக மாற்றம், அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக முடிவுகளை எடுத்தல், நடை முறையில் பயனுறும் வகையில்

பயன்படுத்த முடியும். அதா வது அரசமைப்பு சட்டம், உள்ளூராட்சி தேர்தல் சட்டம், பொது நிர்வாகச் சட்டம், முகாமைத்துவ சட்டம், வரி செலுத்தும் வழி வகைகள் பற்றிய சட்டம், பொதுச் சுகாதாரம், பௌதிக திட்டமிடல், பொது நலன் சேவைச்சட்டம் போன்றவற்றையும் இச்சபைகள் பயன்படுத்த முடியும்.

### ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள உள்ளூராட்சி சபைகள்

### கொழும்பு மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகள் (13)

**மாநகர சபைகள் (5) :-** 1.கொழும்பு 2. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை 3. தெஹிவளை - கல்கிஸை 4. மொரட்டுவை; 11. கடுவலை

**நகர சபைகள்(5):-** 5.கொலன்னாவை 6.மஹரகம 7.சீதாவக்கபுர 8.பொரலஸ்கமுவ 9.கெஸ்பேவ

**பிரதேச சபைகள்(3) :-** 10.கொட்டிகாவத்த முல்லேரியாவ 12.ஹோமாகம 13.சீத்தாவக்க

### கம்பஹா மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகள் (19)

**மாநகர சபைகள்(2):-**1. கம்பஹா 2. நீர்கொழும்பு

**நகர சபைகள் (5):-** 3. கட்டுநாயக்க - சீதுவ 4. மினுவாங்கொடை 5. ஜா-எல 6. வத்தளை - மாபோலை 7.பேலியகொடை

**பிரதேச சபைகள் (12):-** 8. கட்டான 9. திவுலபிட்டிய 10. மீரிகம 11. அத்தனகல்ல 12.மினுவாங்கொடை 13.ஜா எல 4.கம்பஹா 15. தொம்பே 16.மஹர 17. வத்தளை 18. களனி 19.பியகம

### களுத்துறை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகள் (17)

**மாநகர சபைகள்:-** இல்லை

**நகர சபைகள் (4):-** 1.பாணந்துறை 2.ஹொரண 3.களுத்துறை 4.பேருவளை

பிரதேச சபைகள் (13):- 5.ஹொரண 6. பாணந்துறை 7. களுத்துறை 8. பண்டாரகம 9. மதுராவல 10.புலத்சிங்கள 11.தொடங்கொடை 12.பேருவளை 13.மத்துகம 14.அகலவத்தை 15. பாலிந்த நுவர 16.வலல் லாவிட்ட 17.மில்லனிய.

### உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை

| மாகாண சபை | நிருவாக மாவட்டம் | கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை | உள்ளூர் அதிகார சபைகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மாநகர சபைகள் | நகர சபைகள் | பிரதேச . சபைகள் |
| மேல் | கொழும்பு | 557 | 5 | 5 | 3 |
| | கம்பஹா | 1177 | 2 | 5 | 12 |
| | களுத்துறை | 762 | | 4 | 13 |
| மத்திய | கண்டி | 1188 | 1 | 4 | 17 |
| | மாத்தளை | 545 | 2 | | 11 |
| | நுவரெலியா | 491 | 1 | 2 | 9 |
| தென் | காலி | 895 | 1 | 2 | 17 |
| | மாத்தறை | 650 | 1 | 1 | 15 |
| | அம்பாந்தோட்டை | 576 | 1 | 1 | 10 |
| வட | யாழ்ப்பாணம் | 435 | 1 | 3 | 13 |
| | கிளிநொச்சி | 95 | | | 3 |
| | மன்னார் | 153 | | 1 | 4 |
| | வவுனியா | 102 | | 1 | 4 |
| | முல்லைத்தீவு | 136 | | | 4 |
| கிழக்கு | மட்டக்களப்பு | 346 | 1 | 2 | 9 |
| | அம்பாறை | 503 | 2 | 1 | 17 |
| | திருக்கோணமலை | 230 | | 2 | 11 |
| வடமேல் | குருநாகல் | 1610 | 1 | 1 | 19 |
| | புத்தளம் | 548 | | 2 | 10 |
| வடமத்திய | அநுராதபுரம் | 694 | 1 | | 18 |
| | பொலநறுவை | 295 | 1 | | 7 |
| ஊவா | பதுளை | 567 | 2 | 1 | 15 |
| | மொணராகலை | 319 | | | 10 |
| சபபிரகமுவ | இரத்தினபுரி | 575 | 1 | 2 | 14 |
| | கேகாலை | 573 | | 1 | 11 |
| | | 14022 | 24 | 41 | 276 |

### கண்டி மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகள் (22)

**மாநகர சபைகள் (1) :-** 1.கண்டி


**நகர சபைகள் (4):-** 2.வத்தேகம 3.கடுகண்ணாவ 4. கம்பளை 5.நாவலப்பிட்டி

**பிரதேச சபைகள் (17):-** 6.பூஜாபிட்டிய 7.அக்குரன 8.பாத்ததும்பர 9.பன்வில 10.உடுதும்பர 11.மினிப்பே 12.மெததும்பர 13.குண்டசாலை 14.ஹாரிஸ்பத்துவ 15.தும்பனை 16.யட்டிநுவர 17.உடுநுவர 18.கண்டி பட்டிணமும் சூழலும் மற்றும் கங்க வட்ட கோரளை 19.பாத்தஹேவாஹெட்ட 20.உடபலாத்த 21.கங்க, இஹல கோரளை 22.பஸ்பாகே கோரளை.

(தொடரும்...)

# பாரதம்

## அகழாய்வில் குழந்தையின் எலும்புக்கூடு கண்டெடுப்பு



(சென்னை)
கீழடி அருகே கொந்தகை யில் நடைபெற்று வரும் அகழா ய்வுப் பணியில் மேலும் ஒரு குழந்தையின் எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம் திருப் புவனம் அருகே கீழடி, அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய பகுதிகளில் 6 ஆம் கட்ட அகழா ய்வுப் பணி நடந்து வருகிறது.

இந்த நிலையில் கொந்த கையில் நேற்று முன்தினம் நட ந்த அகழாய்வுப் பணியில் குழந் தையின் முழு எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டது. இதைய டுத்து மாநில தொல்லியல் துறை துணை இயக்குநர் சிவானந் தம், தொல்லியல் ஆய்வாளர் கள் மற்றும் உதவியாளர்கள் எலும்புக்கூட்டினை சேதாரம் இல்லாமல் முழுமையாக தோண்டி எடுத்து சுத்தம் செய்தனர். அதன் அளவை கணக்கிடும்போது 95 செ.மீ. உயர குழந்தை யின் எலும்புக்கூடு என்பது தெரியவந்தது.

இதன் தலை பகுதி மட்டும் 20 செ.மீ. இருக்கும் என தொல் லியல் துறை அதிகாரிகள் தெரி வித்தனர்.

இந்த குழந்தையின் எலும் புக் கூடு கிடைத்த இடத்தின் அருகே கடந்த மாதம் 75 செ.மீ. உயரம் உள்ள குழந் தையின் எலு ம்புக்கூடு கண் டெடுக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. இந்த எலும்புக் கூடு கள் மரபணு சோதனைக்கு அனுப்பப்பட்டு பரிசோதிக்கப்ப டும் என தொல்லியல் துறை யினர் தெரிவித்தனர். (2)

## உலக சுகாதார அமைப்பிலிருந்து விலகியது அமெரிக்கா

### ட்ரம்ப் அறிவிப்பு



(வோஷிங்டன்)
உலக சுகாதார அமைப்பி லிருந்து அமெரிக்கா விலகுவ தாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் அதிகாரபூர் வமாக அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் விவ காரத்தில் உலக சுகாதார அமை ப்பு சீன சார்பு நிலையில் உள்ள தால் அந்த அமைப்புடனான உறவை அமெரிக்கா துண்டித் துக்கொள்வதாக கடந்த மே மாதம் ட்ரம்ப் அறிவித்தார்.

அந்த அமைப்புக்கு வழங்கி வரும் நிதி நிரந்தரமாக நிறுத் தப்படும் எனவும் அமெரிக்கா இந்த அமைப்பில் இருந்து வெளி யேறும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து, உலக சுகா தார அமைப்புக்கு வழங்கிவந்த பல மில்லியன் டொலர்கள் நிதியையும் அமெரிக்க ஜனா திபதி நிறுத்தினார்.

இந்நிலையில், உலக சுகா தார அமைப்பில் இருந்து அதி காரபூர்வமாக விலகுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.நா.பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரேசிற்கு அனுப்பிய கடிதத் தில், 'உலக சுகாதார அமைப் பில் இருந்து அமெரிக்கா வெளி யேறிவிட்டது எனத் தெரிவிக் கப்பட்டிருந்தது.

ஐ.நா.வின் நடைமுறைப்படி 2021 ஆம் ஆண்டு ஜூலை 6 ஆம் திகதிதான் வெளியேற்ற நடைமுறை அதிகாரபூர்வமாக அமுலுக்கு வரும்' என்பது குறிப் பிடத்தக்கது. (2)

## முகக் கவசம் அணிவதில் இங்கிலாந்து பின்தங்கியுள்ளது

### விஞ்ஞானி எச்சரிக்கை

(லண்டன்)
கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்க முகக்கவசம் அணிவதில் இங்கிலாந்து பின் தங்கியுள்ளதாக நோபல் பரிசு வென்ற விஞ்ஞானி வெங்கி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று நோய் மோசமாகப் பாதித்துள்ள 10 நாடுகளில் இங்கிலாந்து 7 ஆவது இடத்தில் இருக்கிறது. கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுப்பதற்கு கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என்று உலக சுகாதார நிறுவ னம் தொடங்கி உலகளாவிய மருத்துவ விஞ்ஞானிகள் வரை யில் அறிவுறுத்தி வருகின்ற னர். ஆனால் இதில் இங்கிலா ந்து மிகவும் பின்தங்கி இருப்பது அம்பலத்துக்கு வந்துள்ளது.

முகத்தை மறைக்காமல் யாரும் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது. பொது இடங்களில் தனிமனித இடைவெளியை பின்பற்றுவது கடினமாக உள்ள இந்த நேரத்தில் கண்டிப்பாக அனைவரும் முகக்கவசம் அணிந்து வரவேண்டும்.

இங்கிலாந்தில் கொரோனா வைரஸ் தொற்று பரவலின் இரண்டாவது அலையை தடு க்க வேண்டும் என்றால், கை கழுவுவதுடன் தனிமனித இடை வெளியைப் பின்பற்றுவதுடன், முகக்கவசம் அணிவதும் சம அளவில் முக்கியமானது. இது அவர்களுக்கு மட்டுமல்ல, அதே அளவில் மற்றவர்களுக்கும் முக்கியமானது. இங்கிலாந்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று தீவிரமாகப் பரவிவ ரும் வேளையிலும் பொதுமக்க ளில் குறைந்த அளவினரே முகக்கவசம் அணிந்து வெளியே வருவதில் ஆர்வம் காட்டுகின்ற னர். அமெரிக்கா, இந்தியாவு டன் ஒப்பிடுகையில் இங்கிலாந் தில் முகக் கவசம் அணிவோர் எண்ணிக்கை மிகவும் குறை வாகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (2)

## அமெரிக்கா எப்போதும் இந்தியாவிற்கு கைகொடுக்கும்




(வோஷிங்டன்)
சீனாவுடனான மோதலில் இந்தியாவின் பக்கம் அமெரிக்க இராணுவம் நிற்கும் என்று வெள்ளை மாளிகை தலைமை அதிகாரி சூசகமாகத் தெரிவித் தார்.

அமெரிக்க வெள்ளை மாளி கையின் தலைமை அதிகாரி மார்க் மீடோஸ், ஊடகம் ஒன் றிற்கு வழங்கிய சிறப்பு பேட் டியின் போது அவரிடம், இந் திய-சீனா இடையிலான மோதல் பற்றி கேட்கப்பட்ட போது இவ் வாறு தெரிவிக்கப்பட்டது.

ஒரு விடயத்தை தெளிவுப டுத்திக் கொள்கிறோம். உலகத் தில் சீனாவோ, மற்ற நாடுகளோ தாங்கள்தான் சக்திவாய்ந்தவர் என்று சொல்லிக்கொண்டு, பிறநாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்துவதை அனுமதிக்க மாட்டோம். எந்த பிராந் தியத்திலும் இதை அனுமதிக்க மாட்டோம்.

சீனாவாக இருந்தாலும், அல்லது வேறு எந்த நாடாக இருந்தாலும் அந்த நாட்டை ஆதரிக்க மாட்டோம்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே மோதல் ஏற்பட்டாலும் நட்புறவின் (இந் தியா) பக்கம் அமெரிக்க இராணுவம் நிற் கும். அமெரிக்க இராணுவம் தொடர்ந்து வலுவாக நிற்கும்.

தெற்கு சீன கடல் பகுதிக்கு 2 விமானம் தாங்கி கப்பல்களை அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது. உலகிலேயே அமெரிக்கா தான் இன்னும் வலுவான சக்தி என்பதை உலகம் அறிந்து கொள்வதற்காக இதை செய்கிறோம் என மேலும் அவர் தெரிவித் தார். (2)

### கொரோனா வைரஸ் தாக்கம்

## கென்யாவில் 2021 வரை மூடப்படும் பாடசாலைகள்

(நைரோபி)
ஆபிரிக்க நாடான கென்யா வில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக அனைத்து பாடசா லைகளும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி வரை மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற் றின் வேகம் உலகம் முழுவ தும் அதிகரித்துவரும் நிலை யில் கென்யாவில் கடந்த மார்ச் மாதம் பாடசாலைகள் அனைத் தும் மூடப்பட்டன.

இந்நிலையில் வழக்கமாக ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடத்தப்படும் இறுதி ஆண்டு பரீட்சைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் கடுமையான வழி காட்டுதல்களைக் கடைப் பிடித்தால் செப்டெம்பர் மாதத் தில் மீண்டும் திறக்கப்படும் என கல்வி அமைச்சர் ஜோர்ஜ் மாகோஹா தெரிவித் துள் ளார்.

கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவில் 164 இறப்புகள் மற்றும் 8,000 இற்கும் மேற்பட்ட கொரோனா நோயாளிகள் அடை யாளம் காணப்பட்டுள்ளதுடன் மேலும் புதிய தொற்று நோயா ளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை, ஜனாதிபதி உஹூரு கென்யா ட்டா, நைரோபி மற்றும் மொம் பசாவின் முக்கிய நகரங்களின் பயணக் கட்டுப்பாடுகளை நீக் குவது உட்பட ஒரு கட்டமாக நாட்டை மீண்டும் திறப்பதாக அறிவித்தார்.

இருப்பினும் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படு த்தும் வகையில் அங்கு இரவு நேரத்தில் பொது முடக்கம் அமல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## கலிபோர்னியாவில் வேகமெடுக்கும் கொரோனா 10 ஆயிரத்திற்கு மேல் புதிய தொற்றாளர்கள்

(கலிபோர்னியா)
கலிபோர்னியாவில் புதிதாக 10,201 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய் யப்பட்டுள்ள நிலையில் மாநி லத்தில் உறுதி செய்யப்பட்ட மொத்த நோயாளிகளின் எண் ணிக்கை 287,514 ஆக அதி கரித்துள்ளது.

இந்த அதிகரிப்பானது கட ந்த வாரம் பொருளாதாரத்தை மீண்டும் திறப்பதற்கும் உட் புற உணவகங்களுக்கு தடை விதிப்பதற்கும் மதுக்கடைகளை மூடுவதற்கும் சமூக தூரத்தை அதிகரிப்பதற்கும் வழிவகுத்தது.

இதற்கிடையில், டெக்சாஸ் மாநிலத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை புதிதாக 10,028 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்தவகை யில் கலிபோர்னியாவில் சுமார் 6,500 பேர் உயிரிழந்ததோடு டெக்சாஸில், 3,000 இற்கும் குறைவான உயிரிழப்பு கள் பதிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்ட ுள்ளது. அமெரிக்காவில் கிட்டத்தட்ட 3 மில் லியனுக்கும் அதிகமான கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் அடையா ளம் காணப்பட்டுள்ள அதேவேளை 131,000 இற்கும் மேற்பட்ட இறப்புகள் பதிவாகியு ள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

நே
2
(
உள்
முந்
கப்
நேற்
வாய்க்கி
ணத்தி
பாலத்தி
டிருந்த
தடை
ணிரில்


# வலம்புரி கல்விப் பிரிவு வழங்கும் தரம் 5 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்

**நேரம்: 3 மணித்தியாலம்** **வினாப்பத்திரம் - 01, 02**


## பகுதி I

❖ 1 ஆம் 2 ஆம் வினாக்களில் முதலாவது உருவுக்கு ஒத்த உருவைத் தெரிவு செய்க.

01) (1) (2) (3)




02) (1) (2) (3)




❖ 3ஆம் 4ஆம் வினாக்களில் வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.

03) (1) (2) (3)



04) (1) (2) (3)



❖ 5, 6 வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் இரண்டை ஒரு கூட்டமாகவும், இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தி அவ்விரு கூட்டங்களையும் சேராததை இனங்காண்க.

05) கிளி, காகம், புறா, கழுகு, பருந்து
1.காகம் 2.கழுகு 3.கிளி

06) அதிபர், பிக்கு, மாணவர், வைத்தியர், நோயாளி
1.மாணவர் 2.பிக்கு 3.நோயாளி

❖ தரப்பட்ட பாடலைக் கொண்டு 7ஆம், 8ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.

அல்லும் பகலும் நல்ல
ஆர்வத்தோடு நீங்கள்
கல்வி கற்று நன்மை
கருதி வாழ வேண்டும்

07) கல்வியை நாம் எவ்வாறு கற்க வேண்டும்?
1.அல்லும் பகலும் 2.ஆர்வத்தோடு 3.நன்றாக

08) பாடலில் இடம்பெறும் முன்னிலை பன்மைச் சொல் ஒன்று தருக.
1.நீங்கள் 2.நாங்கள் 3.அவர்கள்

09) பாதையொன்றில் 12 மின் கம்பங்கள் நடப்பட்டுள்ளன. இரு மின்கம்பங்களுக்கு இடையிலான தூரம் $3m$ எனின் பாதையின் மொத்த நீளம் யாது?
1. $36m$ 2. $33m$ 3. $30m$


10) விமலா காலையில் நடக்கும் போது இடது பக்கம் அவளது நிழல் தொடர்ந்து வந்தது. அவள் சென்ற திசை யாது?
1.வடக்கு 2.மேற்கு 3.தெற்கு

11)  நிழற்றப்பட்ட பகுதியை பின்னத்தில் தருக.
(1) $\frac{4}{8}$ (2) $\frac{3}{8}$ (3) $\frac{1}{4}$

12) அதிகளவு சமச்சீர் அச்சுக்களை வரையக் கூடிய வடிவம் எது?
(1) (2) (3)



13) ஒரு வரிசையில் ஆனந்திக்கு முன்னே 10 பேர் நின்றனர். ஆனந்திக்கு பின்னால் நிற்கும் விதுசனுக்கு பின்னால் 8 பேர் நின்றனர். அந்த வரிசையில் மொத்தம் எத்தனை பேர் நின்றனர்?
1. 20பேர் 2. 18பேர் 3. 21 பேர்

14)  இவ்வுருவில் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
1. 10 2. 8 3. 6

15) ஜனவரி மாதம் 4ஆம் திகதி திங்கட்கிழமை எனின், ஜனவரி மாதம் 30 ஆம் திகதி என்ன கிழமை?
1. திங்கள் 2. புதன் 3. சனி

16) அனுலாவின் தந்தை பிரியாவின் மகன் எனின், அனுலாவுக்கு பிரியா என்ன முறை?
1. பேர்த்தி 2. பாட்டி 3. மகள்

17) ஒரு பண்ணையிலுள்ள மாடுகளையும், கோழிகளையும் கணக்கிட்ட போது 100 தலைகள் இருந்தன. அவற்றின் கால்களைக் கணக்கிட்ட போது 260 இருந்தன. பண்ணையிலுள்ள மாடுகள் எத்தனை?
1. 30 2. 50 3. 25

18) 40 நிமிடங்களுக்கு ஒரு தடவை ஒலிக்கும் ஒரு கடிகாரம் உள்ளது. அது மூன்றாவது தடவை மு.ப 8.30 மணிக்கு ஒலித்தது எனின், முதற் தடவை ஒலித்த நேரம் யாது?
1. மு.ப. 6.30 2. மு.ப. 7.10 3. மு.ப 7.50

19) மோட்டார் சைக்கிளின் கதிமானி 131$km$ கல்லைக் கடக்கும் போது | 0 | 1 | 1 | 9 | 9 $km$ | என வாசிப்பை காட்டியது. இதே கதியில் மோட்டார் சைக்கிள் செல்லும் போது 184$km$ கல்லைக் கடக்கும் போது கதிமானி காட்டும் வாசிப்பு
1. 011184$km$
2. 021252$km$
3. 01252$km$

20) பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்க.
1. ஆழமறியாமல் காலை விடாதே.
2. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
3. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு

21) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்னும் பழமொழியின் கருத்து
1. சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாது
2. திறமையில் நம்பிக்கை
3. வாலிபத் துணிவு

22) பின்வருவனவற்றுள் திருத்தமான வடிவம் யாது?
1. புடவை 2. புகையிலை 3. நேத்து

23) தென்றல் காற்று ............... என வீசியது.
1. சடசட 2. குளுகுளு 3. கலகல


❖ 24-26 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.




24) நான் தன்மை எனின் நீங்கள் ................
1. முன்னிலை 2. படர்க்கை 3. ஒருமை

25) சிலைகளை செதுக்குபவன்
1. சிற்பி 2. ஓவியன் 3. கவிஞன்

26) சிறந்த மனிதர்களாக வாழ்வோம். இங்கு அடைமொழிச் சொல்லாக அமைவது
1. மனிதர்கள் 2. சிறந்த 3. வாழ்வோம்

❖ 27 ஆம் 28 ஆம் வினாக்களுக்கு தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிக.

27) 

(1)  (2)  (3) 

28) 

(1)  (2)  (3) 

❖ மிகச் சரியான சொல்லைத் தெரிவு செய்க.

29) பனை வடலி போல தென்னை
1. மரம் 2. செடி 3. பிள்ளை

30) கந்தன் மாட்டை அடித்தான். இவ்வாக்கியத்தின் செயப்படுபொருள்
1. அடித்தான் 2. கந்தன் 3. மாட்டை

❖ பின்வருவனவற்றைப் பயன்படுத்தி 31ஆம் 32 ஆம் வினாக்களுக் குரிய விடையை தெரிவு செய்க.

⊠ - சென்றாள் △ - மாலா ⦶ - வீட்டிற்கு

✿ - வாசித்தாள் ▯ - புத்தகம் □ - கடைக்கு

31) △ ▯ ✿ என்ற குறியீடுகளின் விரிவாக்கம்

1. மாலா புத்தகம் வாசித்தாள்
2. மாலா கடைக்குச் சென்றாள்
3. மாலா வீட்டிற்குச் சென்றாள்


32) மாலா கடைக்குச் சென்றாள் என்ற வாக்கியத்தின் சுருக்கக் குறியீடு யாது?

(1) ✿ □ ⦶ (2) △ □ ⊠ (3) ✿ ▯ □

33) சினைப் பெயரைக் குறிக்கும் சொல் எது?
1. நகரம் 2. தை 3. இலை


34) மண் + குடம் என்பதை சேர்த்து எழுதுக.
1. மட்குடம் 2. மண்குடம் 3. மற்குடம்

35-36 ஆம் வினாக்களில் உருக்களை ஒன்றின் மீது ஒன்றை வைக்கும் போது தோன்றும் உருக்களின் கீழ் கோடிடுக.



35)  

(1) LANE (2) ALEN (3) ELAN

36)  


(1)  (2)  (3) 

37) நீர் கொண்ட பாத்திரமொன்றில் பனிக்கட்டியை இடும்போது அதன் நிலையைக் காட்டும் படம் எது?

(1)  (2)  (3) 

38) பின்வருவனவற்றுள் மிகவும் சிக்கனமான மின்விளக்கு எவ்வாறு அழைக்கப்படும்?
1. LED விளக்கு 2. CFL விளக்கு 3. எடிசன் விளக்கு

39) பின்வரும் உருவின் பரப்பளவு யாது?




1. $96cm^2$ 2. $40cm^2$ 3. $68cm^2$

40) 100 தொடக்கம் 110 வரையுள்ள எண்களை எழுதும் போது இலக்கம் ஒன்று எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?
1. 11 2. 12 3. 13

## பகுதி-II

01) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

வண்ணத்துப்பூச்சிகளின் பிரதான உணவு தேனாகும். அவை பெரும்பாலும் திரவ உணவையே உட்கொள்கின்றன. சுவையை உணரும் உறுப்பு அவற்றின் கால்களிலே அமைந்துள்ளன. அவை கண்களைத் திறந்தபடியே இரவில் ஓய்வெடுக்கின்றன. இவற்றின் இறக்கைகள் அமைந்துள்ள நரம்பு மண்டலம் இறக்கைகளுக்குச் சக்தியைக் கொடுக்கின்றன.

1. வண்ணத்துப்பூச்சியின் சுவையை உணரும் உறுப்பு எதில் அமைந்துள்ளது?
..........................................................................
2. இரவில் வண்ணத்துப்பூச்சி எவ்வாறு உறங்குகின்றது?
..........................................................................
3. ஓய்வெடுக்கின்றது என்பதன் பன்மை வடிவம் யாது?
..........................................................................
4. அங்கம் என்பதன் ஒத்தசொல் யாது?
..........................................................................
5. ஓய்வெடுக்கின்றன என்பதை பிரித்தெழுதுக.
..........................................................................

02) மரபுத் தொடருக்குரிய கருத்தைத் தருக

1. ஆறப்போடுதல்- ..........................................................
2. நட்டாற்றில் விடல்- ..........................................................

03) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. இதன் கருத்து யாது?
..........................................................................

04) பாடலைப்பூர்த்தி செய்க

சுத்தமே என்றும் சுகமளிக்கும் - தீய
சோம்பலை ஓட்டித் துரத்தும் அம்மா!
.............................................
.............................................

05)சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

1. ஒரு ஆடு ஓர் ஆடு
2.காச்சல் காய்ச்சல்

06)பின்வரும் பதம் குறிப்பது

1.குறிஞ்சி -..........................................................
2.ஐம்பொறிகள் -......................................................

07) 1.கரடி உறுமும் என்பது போல தேனீ.......................................
2.வாழையின் இளையது குட்டி என்பது போல மூங்கில்
.........................................

08) விரித்து எழுதுக

1.இ.மி.ச.- ..........................................................
2.இ.ம.வ.- ..........................................................

09) ஆங்கிலப் பதத்தின் தமிழ் வடிவத்தை எழுதுக

1. Be quite -..........................................................
2. Library -..........................................................

10) தமிழ்ப் பதத்தின் ஆங்கில வடிவத்தை எழுதுக.

1. கிராமம் -..........................................................
2.மாதம் -..........................................................

11) பின்வரும் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லைத் தருக.

1. வ(த்)துற தென்ன -..........................................
2.குருத்துமா எய்த? -..........................................

12) பின்வரும் தமிழ்ச் சொல்லுக்குரிய சிங்களச் சொல்லை தருக

1.அதிபர் - ..........................................
2.சூரியன்- ..........................................

13) பின்வரும் சொல்லுக்குரிய உயிர்க்குறியை எழுதுக.

1.பாலைவனம் - ..........................................
2.சிந்தனை - ..........................................
3.சுவாசம் - ..........................................

14) பின்வரும் படத்தைப் பார்த்து எழுவாய், பயனிலை அடங்கியதாக ஐந்து சொற்களுக்கு குறையாமல் மூன்று வாக்கியங்கள் அமைக்குக.



1.....................................................................
.....................................................................
2.....................................................................
.....................................................................
3.....................................................................
.....................................................................

❖ தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடையை எழுதுக

01) தரப்பட்டுள்ள எழுத்திலுள்ள எண்ணை இலக்கத்தில் எழுதுக.
ஐயாயிரத்து முந்நூற்று எண்பத்து ஒன்று
.............................................

02)

| | |
|---|---|
| 8 | 3 |
| 5 | 0 |

தரப்பட்ட இலக்கங்களைப் பயன்படுத்தி ஆகக்கூடிய மிகப்பெரிய எண்ணிற்கும் மிகச் சிறிய எண்ணிற்கும் இடையேயுள்ள வித்தியாசம் யாது?
.............................................

03) மூன்று தீக்குச்சிகளால் ஆக்கக்கூடிய பத்திற்குட்பட்ட உரோமன் எண்கள் எத்தனை?
.............................................

04) கொழும்பிலிருந்து புறப்பட்ட புகையிரதத்தில் 7582 பயணிகள் பயணித்தனர். இவர்களில் 2899 பேர் புத்தளத்தில் இறங்கியபோது 2926 பயணிகள் ஏறினார்கள். தற்போது புகையிரதத்தில் உள்ள பயணிகள் எத்தனை பேர்?
.............................................

05) தரப்பட்டுள்ள எண்கோலங்களில் அடுத்துவரும் எண்களை எழுதுக.

1. 3, 5, 6, 10, 09, ........, .........
2. 6, 9, 12, 15, ..........., ..........


06) விழா ஒன்றிற்கு வருகை தந்த பார்வையாளர்கள் தொகை 1035. அவர்களில் உள்நாட்டுப் பார்வையாளர்களின் தொகை 793 ஆகும். வெளிநாட்டுப் பார்வையாளர் தொகை யாது?
.............................................

07) ரூமி கடையொன்றிற்குச் சென்று ரூபா 35.50 பெறுமதியுடைய கொப்பிகள் இரண்டும் ரூபா 9.50 பெறுமதியுள்ள அழி இறப்பர்கள் இரண்டும் வாங்கிய பின் கடைக்காரரிடம் ரூபா 100.00 இனைக் கொடுத்தார். கடைக்காரர் ரூமிக்கு கொடுத்த மீதிப் பணம் எவ்வளவு?
.............................................

08) ஒரு வைத்தியர் நோயாளி ஒருவருக்கு காலை, மதியம், இரவு மருந்தாக ஒருவேளைக்கு 4 மாத்திரைகள் வீதம் 3 நாட்களுக்கு மாத்திரைகள் வழங்கினார். அந்நோயாளிக்கு வைத்தியர் வழங்கிய மாத்திரைகள் எத்தனை?
.............................................

09) 16m நீளமுள்ள வடிகால் ஒன்றில் 7m 25cm வெட்டப்பட்டது. இன்னும் வெட்ட வேண்டிய நீளம் எவ்வளவு?
.............................................


10)




மேலேயுள்ள வரைபடத்தைக் கொண்டு கொழும்பிற்கும் நொச்சியாகமவுக்கும் இடையிலான தூரத்தைக் காண்க.
.............................................

11) குழியொன்றில் மூன்று பாகற்காய் வீதம் 927 விதைகளை நடுவதற்கு எத்தனை குழிகள் தேவை?
.............................................


12)



1. இத்திண்ம உருவின் பெயர் யாது?
.............................................


2. உச்சிகளினதும் முகங்களினதும் மொத்த எண்ணிக்கை யாது?
.............................................

13)




இங்கே A பாத்திரத்தின் மூலம் முழுமையாக நீரினை எடுத்து B பாத்திரத்தினை நிரப்புவதற்கு எத்தனை தடவைகள் A பாத்திரத்தினை பயன்படுத்த வேண்டும்.?
.............................................

14) பின்வரும் உருவின் பரப்பளவைக் காண்க?





.............................................

15) முற்பகல் 7.20 இற்குப் படிக்கத் தொடங்கிய தீபன் பிற்பகல் 3.30 இற்கு படித்து முடித்தார் எனின் தீபன் படிப்பதற்கு எடுத்த நேரம் எவ்வளவு?

.............................................

16)ஒரு பாடசாலையில் 2019 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைவர் என எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை வகைக் குறிப்பதற்கு இந்த வரைபு வரையப்பட்டுள்ளது.




1.தரம் 5 A இல் சித்தியடைந்தவர் என எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 5C இல் எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையின் 6 மடங்காகும். தரம் 5C இல் எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை வரைபில் குறித்துக்காட்டுக.

2. அப்பாடசாலையில் 43 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள் எனின் சித்தியடையமாட்டார்கள் என எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

❖ சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01) ஆபத்து வேளைகளில் ஓட்டினுள் புகுந்து பாதுகாப்புத் தேடும் பிராணிகளின் தொகுதி
1.ஆமை, கடலாமை, நத்தை
2.ஒக்டோபஸ், நத்தை, ஆமை
3.ஆமடில்லா, நத்தை, ஆமை
4.வெளவால், ஆமை, நத்தை

02)வித்துப் பரம்பலுக்கு உதவும் பறக்கும் முலையூட்டி எது?
1.குரங்கு 2.அணில் 3.வெளவால் 4.முயல்

03)பின்வருவனவற்றில் பால் உணவாகக் கருதப்படாதது எது?
1.யோகட் 2.தயிர் 3.பாற்கட்டி 4.பழரசம்

04) ஆகாயத்தோட்டி என அழைக்கப்படுவது?
1.கிளி 2.பருந்து 3.காகம் 4.குரங்கு

05) அங்கீகரிக்கப்பட்ட தரமான பண்டம் என்பதற்கான தரச்சான்றுகள்
**1.SIS, ISO 2. SLS, ISO 3.SAB, SLS 4.SAB, SOS**

06)பின்வருவனவற்றில் இலவசமாகக் கிடைக்கும் சேவை எது?
1.கல்வி 2. மின்சாரம் 3. போக்குவரத்து 4. தபால்

07)தெதுறு ஓயா கடலுடன் கலக்கும் இடம்
1.மட்டக்களப்பு 2.அம்பாந்தோட்டை
3.சிலாபம் 4. யால

08) பின்வருவனவற்றில் உணவாகப் பயன்படுத்த முடியாத வித்து வகை எது?
1.பாசிப்பயறு 2.நெல் 3.சோளம் 4.வெள்ளரி

09)பின்வருவனவற்றுள் புவியின் துணைக்கோளாக அமைவது?
1.சூரியன் 2.சந்திரன் 3.புதன் 4.சனி

10) சுகதேகி ஒருவர் நாளொன்றுக்கு அருந்தும் நீரின் அளவு
1. 1.5-2 லீற்றர் 2. 2-4 லீற்றர் 3. 5-6 லீற்றர் 4. 3-4 லீற்றர்

11)நோய்கள் குணமாவதற்கு பிரித் ஓதிய நீரைப் பருகும் பழக்கமுடைய மதத்தவர்கள்
1.பௌத்தர்கள் 2.முஸ்லிம்கள்
3.தமிழர்கள் 4.கிறிஸ்தவர்கள்

12)மீலி முட்டைப் பூச்சி அதிகளவு சேதம் ஏற்படுத்தும் தாவரங்கள்/ பயிர்கள்
1. மிளகாய், கத்தரி 2. பயிற்றை, வெண்டி
3.பாகல், புடோல் 4. கத்தரி, வெண்டி

13) எமது உடலில் இருந்து அதிகளவில் நீர் வெளியேறும் சந்தர்ப்பங்களில் ஒன்று
1.உட்சுவாசம் 2.தும்மல் 3.சிறுநீர் 4.இருமல்

14) மத்திய மலைநாட்டில் அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தும் இயற்கை அனர்த்தங்களில் ஒன்று
1.வெள்ளப்பெருக்கு 2.மண்சரிவு
3.காட்டுத்தீ 4.சூறாவளி

15)பின்வருவனவற்றுள் தொற்றுநோய் அல்லாதது
1.சளி 2.புற்றுநோய்
3.அம்மை 4.கொலரா

16)ஓடும் நீரின் சக்தியைப் பயன்படுத்தி இயங்கத்தக்க உபகரணங்களில் ஒன்று
1.திசைகாட்டி 2.பம்பரம்
3.நீர்வடிகட்டி 4.நீர்ச்சில்லு

17)பின்வருவனவற்றில் இலத்திரனியல் ஊடகங்களில் ஒன்று
1.பத்திரிகை 2.துண்டுப்பிரசுரம்
3.மின்னஞ்சல் 4. அறிவித்தல்

18)பெருந்தோட்டங்களில் அழைப்புக்காகப் பயன்படுத்தப்படும் ஒலிச் சைகை யாது?
1.சைரன்ஒலி 2.சைக்கிள்மானி
3.வாகனஒலி 4.கோயில்ஒலி

19)புளிப்புச் சுவையுடைய பழங்களில் காணப்படும் விற்றமின் வகை யாது?
1.விற்றமின் A 2.விற்றமின் C
3.விற்றமின் D 4.விற்றமின் E

20) பின்வருவனவற்றில் புகையூட்டல் மூலம் பாதுகாக்கப்படும் உணவு பொருள் எது?
1.மீன் 2.பலாச்சுளை 3.பணங்கிழங்கு 4.கருவாடு

21)பண்டையகாலத்தில் பயன்படுத்தப்பட்ட போக்குவரத்து முறைகளின் பயன்களில் ஒன்று
1.அதிக செலவு 2.நேர வீண்விரயம்
3.சூழல்நேயத்தன்மை 4.விரைவு

22)மின்காந்தம் ஒன்றை ஆக்குவதற்குத் தேவையான பொருட்கள் எவை?
1.உலர்மின்கலம், இரும்பு ஆணி, செம்புக்கம்பி
2.மரப்பலகை, காந்தம், ஆணி
3.பிளாஸ்ரிக் துண்டு, உலர்மின்கலம், செப்புக்கம்பி
4.ஆளி, உலர் மின்கலம், காந்தம்

23)இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படுபவர்?
1.ஆதர் சி. கிளார்க் 2.C.W.W.கன்னங்கரா
3.ஆனந்தகுமாரசாமி 4.D.B.ஜயா

24)சர்வதேச குடிநீர் தினம் கொண்டாடப்படுவது?
1.சித்திரை 22 2.மார்ச் 22
3.ஒக்டோபர் 6 4.டிசெம்பர் 8

25)காற்று சக்தி பயன்படும் சந்தர்ப்பம் அல்லாதது
1.மின்சார உற்பத்தி 2.சிகை உலர்த்துதல்
3.ஆகாய விமானம் பறத்தல் 4.நெல்லில் பதரை நீக்குதல்

26)இரவு வானில் சந்திரனை அவதானிக்கப் பொருத்தமான கருவி
1.கைவில்லை 2.கமரா
3.நுணுக்குக்காட்டி 4.அரிய இரு விழியன்

27)பின்வருவனவற்றில் எமது நாட்டுக்கே உரித்தான தாவரம் அல்லாதது
1.காட்டிலுப்பை 2.நிலவேம்பு
3.சைப்பிரஸ் 4.சீண்டுக்கொடி

28)பின்வருவனவற்றில் காந்தங்களின் வடிவ வகைக்குள் அடங்காதது
1.மின்காந்தம் 2.சட்டக்காந்தம்
3.வட்டக்காந்தம் 4.குண்டுமுனைக்காந்தம்

29)பண்டைய காலத்தில் வெளிநாடுகளுக்குப் போர்ப்படையை அனுப்பி வைத்த மன்னன்
1.வசபன் 2.மகா பராக்கிரமபாகு
3.வலகம்பா 4.தேவநம்பியதீசன்

30) இக்குறியீடு உணர்த்துவது
1.இலங்கை மின்சார சபை
2.மின் விநியோகிக்கும் இடம்
3.காற்றாலை
4.நீர் மின் உற்பத்தி




# நீர்த்தேக்கத்திற்குள் கவிழ்ந்த பேருந்து
# 21 பேர் உயிரிழப்பு;15 பேர் காயம்

## சீனாவில் துயரம்



(பீஜிங்)

**தென் மேற்கு சீனாவில் பேருந்து ஒன்று வீதியை விட்டுவிலகி, அருகில் உள்ள நீர்த்தேக்கத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 21 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 15 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குய்ஷோ மாகாணத்தின் அன்ஷுனில் ஒரு பாலத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது, அது வீதியோரத் தடை வழியாக மோதி தண்ணீரில் பாய்ந்தது.

குறித்த பேருந்தில் இருந்தவர்களில் பல்கலைக்கழத்திற்கான வருடாந்த கல்வி நுழைவுப் பரீட்சையில் கலந்து கொள்ள திட்டமிடப்பட்ட மாணவர்களும் அடங்குவதாக கூறப்படுகிறது.

அந்த நேரத்தில் பேருந்தில் எத்தனை பேர் இருந்தார்கள், அவர்களில் எத்தனை பேர் மாணவர்கள் என்பது தொடர்பான விபரங்கள் வெளியாகவில்லை.

இந்த விபத்துக்கான காரணம் வெளியாகாத நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (2)

# முடக்கநிலை அறிவிப்பைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் குதித்த மக்கள்





(பெல்கிரேடில்)

செர்பிய தலைநகர் பெல்கிரேடில் ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் கலகப் பிரிவு பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று அதிகரிப்பை கட்டுப்படுத்தும் விதமாக நகரத்தில் வார இறுதி ஊரடங்கு உத்தரவை அரசாங்கம் அறிவித்ததை அடுத்து இந்த மோதல் இடம் பெற்றுள்ளது.

நெருக்கடியை தவறாக கையாண்டதாக குற்றம் சாட்டி, ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை விடுத்து ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் வீதிகளில் இறங்கினர்.

கொரோனா வைரஸ் தொற்றுகள் அதிகரித்து வருவதால், வார இறுதியில் பெல்கிரேடை முடக்குவது உள்ளிட்ட கடுமையான நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படும் என்று செர்பிய ஜனாதிபதி அலெக்ஸாண்டர் வுசிக் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்தார். வுசிக்கின் குறித்த அறிவிப்பின் பின்னர் பெல்கிரேடின் மத்திய சதுக்கத்தில் பல ஆயிரம் போராட்டக்காரர்கள் நாடாளுமன்றத்தின் முன்பாக கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஒரு சில எதிர்ப்பாளர்கள் ஒரு பொலிஸ் சுற்றுவட்டாரத்தைத் தாண்டி, ஒரு கதவை உடைத்து நாடாளுமன்ற கட்டடத்திற்குள் நுழைந்த போதும் பொலிஸாரினால் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதன்பின்னர் பொலிஸாருடன் மோதல் இடம்பெற்றதாகவும் ஏராளமான பொலிஸ் வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன என்றும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏழு மில்லியன் மக்கள் வாழும் நாடான செர்பியாவில் 16 ஆயிரத்து 168 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதுடன் 330 இறப்புகள் பதிவாகியுள்ளன.

ஆனால் இந்த எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகிறது. குறிப்பாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மட்டும் 299 புதிய நோயாளிகளும் 13 இறப்புகளும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(2)

# 100 ஆண்டுகள் பழைமையான அரியவகை மரம் கண்டுபிடிப்பு

(அல் அய்ன்)

அல் அய்ன் பகுதியில் 100 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மரம் கண்டுபிடிக்கப்பட்டது.

ஓமான் நாட்டின் எல்லையை யொட்டியுள்ள அல் அய்ன் பகுதியில் மலகத் என்ற இடத்தில் அல்சர என்ற 100 ஆண்டுகள் பழைமையான மரம் கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த மரம் பாறைகளுக்கு இடையே வளர்ந்துள்ளது.

பொதுவாக இந்த வகை மரம் ராசல் கைமா பகுதியில் மட்டுமே வளரக் கூடியது. அல் அய்ன் பகுதியில் வளர்ந்துள்ள இந்த மரம் குறித்த தகவல் நீண்ட காலமாக தெரியாமல் இருந்துள்ளது.


இந்த மரத்தின் இலைகளைப் பொதுமக்கள் தண்ணீரில் கொதிக்க வைத்து மருத்துவ பயன்பாட்டுக்கு பயன்படுத்தியுள்ளனர்.

இந்த மரத்தின் எண்ணிக்கையை எவ்வாறு அதிகரிக்க முடியும் என்பது குறித்து பல்கலைக்கழகங்களில் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. இதில் வெற்றி கிடைக்கும் பட்சத்தில் குறிப்பிட்ட சில இடங்களில் இந்த மரங்களை வளர்க்க முயற்சி மேற்கொள்ளப்படும். இந்த மரத்தில் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் பூக்கள் பூக்கும். மார்ச், ஏப்ரல் மாதங்களில் காய்கள் காய்க்கும்.

அமீரகம் தவிர ஆபிரிக்க நாடுகள், எகிப்து, ஏமன், ஜோர்தான், பாலஸ்தீனம் உள்ளிட்ட நாடுகளிலும் இந்த மரம் வளரக்கூடியது. இதனை எகிப்து நாட்டு மக்கள் புனிதமாக கருதி வந்துள்ளனர் என வரலாற்று ஆய்வுகள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

அமீரகம் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளில் மிகவும் சிறிய அளவிலேயே இந்த மரங்கள் இருந்துள்ளன.

அமீரகத்தில் இந்த மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்



படும் என அபுதாபி சுற்றுச் சூழல் ஆய்வு மற்றும் வன மேம்பாட்டு அதிகாரி தெரிவித்தார். (2)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

17

கலாநிதி முருகர் குணசிங்கம்

அண்மைக்காலங்களில் சுமார் நான்காயிரம் ஈழத்தமிழர்கள் இலங்கையில் இருந்து மலேசியாவுக்கு அகதிகளாக வந்துள்ளனர் என்பதையும் அறிய முடிந்தது.

இவ்வாறானவர்களின் எதிர்காலம் குறிப்பாக இளம் தலைமுறையினரின் எதிர்காலம் பெரும் கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.

ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமை, பாதுகாப்பு, சுதந்திரம் என்பன உறுதிப்படுத்தப்படும் வரை மேற்படி அகதிகள் பல்வேறு வகையிலான கொடூரமான வேதனைகளைச் சுமந்து கொண்டு வெறுமையான உணர்வுடன் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

எனவே மேற்கூறப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் சுமார் 28,738 இற்குச் சற்று மேலாக ஈழத்தமிழர்கள் மலேசியாவில் வாழ்கின்றார்கள் என்பது தெரிய வருகின்றது.

### சிங்கப்பூர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து 1959 இல் விடுதலை அடையும் வரை சிங்கப்பூர், மலேசியத் தீபகற்பத்திற்குள் பிரித்தானிய ஆட்சியின் கீழ் ஒரு நிர்வாகப் பிரதேசமாக இருந்தது.

இக்கால கட்டத்தில் சிங்கப்பூரில் ஈழத் தமிழர்களின் குடியேற்றமும் அவர்களின் சனத்தொகையும் மலேசியத் தீபகற்பத்திற்குள் சங்கமம் ஆகின்றது.

இருந்தபோதிலும் சிங்கப்பூர் மலேசியத் தீபகற்பத்தினுள் ஒரு தனிநாடாக அமைந்த பிறகு அங்கு ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வு பற்றித் தனியாக ஆய்வு செய்ய வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

ஈழத்தில் இருந்து குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து 1870 களில் சிங்கப்பூரில் கால்பதித்து பல அரச உயர் பதவிகளை வகித்த முதல் மனிதராக, முன்னோடியாக எம்.வைத்திலிங்கம்பிள்ளை வரலாற்றில் இடம்பெற்று உள்ளார்.

அவரைத் தொடர்ந்து படித்த, இளம் தலைமுறையினர் சிங்கப்பூருக்கு புலம்பெயர்ந்து செல்வதை அறிய முடிகிறது. இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தொடங்கிய ஈழத்தமிழர்களின் சிங்கப்பூர் நோக்கிய புலம்பெயர்வு இருபதாம் நூற்றாண்டின நடுப்பகுதிவரை தங்கு தடையின்றி நடைபெற்றது.

1950களுக்குப் பின்னர் இலங்கை அரசினால் கட்டவிழத்து விடப்பட்ட தமிழருக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கையின் விளைவாக ஈழத்தமிழர்களின் தவிர்க்க முடியாத, கட்டாயமான புலப்பெயர்வு தொடங்குகிறது.

1959 இல் அமைந்த சிங்கப்பூர் நாடு தனது உட்கட்டுமானப் பணிகளுக்காக படித்த இலங்கைத் தமிழரை வரவேற்றது. 1980களில் இருந்து தீவிரம் அடைந்த சிங்கள அரசின் தமிழருக்கு எதிரான படுகொலைகள், சாதாரண நிலையில் உள்ளவர்களையும் சிங்கப்பூரை நோக்கி வீட்டு வேலையாட்களாகச் செல்லத் தூண்டியது.

மேலும் இப்புதிய நூற்றாண்டின் முன்பின்னாக சிங்கப்பூர் அரசு திறமைசாலிகளைத் தனது நாட்டுக்கு அழைக்கும் முயற்சியில் ஈடுபட்டது. படித்த, ஆங்கில அறிவுள்ள ஈழத்தமிழர்கள், குறிப்பாக வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணனித்துறை வல்லுநர்கள், கணக்காளர்கள், கல்விமான்கள் போன்றோரும் சிங்கப்பூர் சென்று உயர் பதவிகளையும் பெற்று நிரந்தர வதிவிட உரிமையும் பெற்றனர்.

ஆனால் அரசியல் அகதிகளை சிங்கப்பூர் அரசு வரவேற்கத் தவறியது.

1881 ஆம் ஆண்டு புள்ளிவிபரங்களின்படி 738 தொழில் வல்லுநர்களாகிய ஈழத்தமிழர் சிங்கப்பூரில் வசித்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது.




1947 இல் எடுக்கப்பட்ட மலேசிய குடிசன மதிப்பின்படி சிங்கப்பூரில் 1372 ஈழத் தமிழர்களும் 1957 இல் 3554 ஈழத்தமிழர்களும் புலம்பெயர்ந்து வந்ததாக அறிய முடிகிறது.

இதனையடுத்து 2010 இன் மக்கள் தொகைக்கான கணக்கெடுப்பில் இலங்கைத் தமிழர்களையும் இந்தியத் தமிழர்களையும் "இந்தியர்கள்" என்ற பகுப்பினுள் அடக்கப்பட்டுள்ளது.

இதனால் எவ்வளவு ஈழத் தமிழர்கள் சிங்கப்பூரில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்கள் என்று அறிவதில் சிரமங்கள் உள்ளன.

இருந்தபோதிலும் அதிகாரபூர்வமற்ற ஆதாரங்களின்படி 2010களில் சுமார் பத்தாயிரம் தொடக்கம் பதினைந்தாயிரம் வரை ஈழத்தமிழர்கள் சிங்கப்பூரில் வாழ்ந்து வருவதாக அறிய முடிகிறது.

சுருங்கக்கூறின் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஈழத்தமிழர்கள், மலேசியத் தீபகற்பத்திற்குத் தமது பொருளாதாரத் தேவைகளுக்காகச் சென்றார்கள்.

ஆனால் அண்மைக்காலமாக இலங்கையில் உள்ள ஈழத்தமிழருக்கு இழைக்கப்படும் கொடூரமான அழிவுகளால் பல ஆயிரக்கணக்கில் ஈழத்தமிழர்கள் குறிப்பாக இளம் தலைமுறையினரும் நடுத்தர வயதினரும் கூலித்தொழில் மற்றும் வீட்டு வேலை செய்பவர்களாகச் சிங்கப்பூருக்குச் செல்வதை அவதானிக் முடிகிறது.

எவ்வாறாயினும் இலங்கையில் இருந்து வெளியே சென்று மேற்கு நாடுகளில் போய் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள் சிங்கப்பூரில் தற்காலிகமாக நிலைகொண்டு அதனைக் கடந்து செல்லும் நாடாகக் கருதி அங்கு சென்று அடைகின்றனர்.

### பசுபிக் நாடுகள்
### அவுஸ்திரேலியா

பசுபிக் நாடுகளில் முதன்மையாக அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் ஈழத்தமிழர்கள் பெருமளவில் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளாகக் காணப்படுகின்றன. முதலில் அவுஸ்திரேலியாவுக்கு ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்தமை பற்றிக் காண்போம்.

1901 இல் அவுஸ்திரேலியாவில் கூட்டு அரசு (Australian Federation) அமைந்ததை அடுத்து "வெள்ளை நிற அவுஸ்திரேலியக் கொள்கை" (White Australia Policy) செயற்படுத்தப்பட்டது.

அதன்படி 1964 வரை வெள்ளை நிறத்தவர் தவிர ஏனைய இன மக்கள் அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்து செல்ல முடியவில்லை. 1964 ஆம் ஆண்டில் இக்கொள்கை ஓரளவு தளர்த்தப்பட்டது.

அதன் பிறகுதான் ஈழத் தமிழர்கள் அதுவும் குறிப்பாக நன்கு படித்த, ஆங்கிலத்தில் புலமையுள்ள ஒருசிலர் அவுஸ்திரேலியாவுக்குச் சென்று அங்கு நிரந்தர வதிவிட உரிமை பெற்று பல்கலைக்கழகங்களில் உயர் பதவிகளைப் பெற்றுத் தமது புலம்பெயர் வாழ்க்கையைத் தொடங்கினர்.

1956, 1958 ஆம் ஆண்டுகளில் இலங்கை அரசினால் ஈழத்தமிழர்கள் மேல் கட்டவிழ்த்து விடப்பட்ட இன இழிப்பு நடவடிக்கைகள் மேலும் தொடரும் என்பதை உணர்ந்த கல்விமான்கள் அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயரத் தொடங்கினர்.

அவர்களுள் குறிப்பாக பேராசிரியர்கள் எலியேசர், (Eliezer Family) அரசரட்ணம் குடும்பத்தினரைக் குறிப்பிடலாம்.

1973 ஆம் ஆண்டு தொழிற்கட்சி ஆட்சியில் இருந்த பொழுது வெள்ளை நிறக் கொள்கை (White Australia Policy) முற்றுமுழுதுமாகக் கைவிடப்பட்டது.

இதன் விளைவாக ஈழத் தமிழர்கள் கூடுதலாக அவுஸ்திரேலியாவிற்குள் நுழைய முடிந்தது. 1970களில் இருந்து இலங்கையில் அதிகரித்துச் சென்ற ஈழத் தமிழருக்கான இன ஒடுக்குமுறை, கல்வி, வேலைவாய்ப்பு மறுப்பு, நன்கு படித்துப் புலமை வாய்ந்த ஈழத்தமிழர்கள் அவுஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்து செல்வதற்கான தள்ளு சக்தியாக அமைந்தது.

1970களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தபோது தமிழருக்கு எதிராகப் பல சட்டங்களை இயற்றியது. மேலும் இறுக்கமான பொருளாதாரக் கொள்கை, இறக்குமதித் தடை, 1970 களில் ஏற்பட்ட வரட்சி ஆகிய காரணங்களால் நாடு மிகவும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டது.

அதனால் மக்கள் அடைந்த துன்பம் ஈழத்தமிழர்களைத் தமது சொந்த மண்ணில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர வைத்த தள்ளும் காரணியாக இருந்தது.

அத்தோடு அவுஸ்திரேலியாவின் அரசியல் கொள்கை, பல்லினக் கலாசாரங்களை உள்வாங்கும்பரந்த போக்கு (Multiculturalism) பல்வேறு வளங்கள், பல்வேறுபட்ட அரச, தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு, நல்ல ஆங்கிலக் கல்வி வாய்ப்பு தரமான வாழ்க்கை வசதிகள், மருத்துவ, போக்குவரத்து வசதிகள், நல்ல காலநிலை என்பன படித்த ஈழத்தமிழர்களை ஈர்க்கும் காரணிகளாக அமைந்தன.

மேலும் நன்கு கல்வி கற்ற, ஆங்கிலத் தேர்ச்சி பெற்ற, தொழில் பயிற்சி பெற்ற வயது குறைந்த பல்வேறு நாட்டவர்களை அவுஸ்திரேலிய அரசு புள்ளிகள் (Points) ஆகியவற்றின் அடிப்படையில் தொழில்சார் குடிபெயர்வின் பால் (Ṡkill Migration) தெரிவு செய்து அவுஸ்திரேலியாவுக்கு வரவழைத்தது. ஈழத்தமிழர்களுக்கும் இது ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

இலங்கையில் இருந்து மட்டும் அல்ல, உலகின் பல்வேறு நாடுகளிலும் தொழில் புரிந்த, படித்த ஈழத்தமிழர்கள் 1980களில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு வந்து குடியேறினர்.

(தொடரும்)

# நினைவில் நின்று நீங்காத நவாலிப் படுகொலை

நவாலி தாக்குதல் இடம்பெற்ற 25 ஆம் கால் நூற்றாண்டு நினைவு தினம் இன்றாகும்.

இத் தினத்தில் வரலாற்றில் 09.07.1995 இல் இடம்பெற்ற இரத்தக்கறை படிந்த - கோர - கொடூரமான நிகழ்வை தமிழர்களால் என்றும் மறக்கமுடியாது. ஒரு சில நிமிடங்களில் துடிதுடித்து மடிந்தனர் எம் உறவுகள்.

முன்னாள் அரசாட்சியாளர்களின் பணிப்புரையின் பேரில் நடத்தப்பட்ட விமானத்தாக்குதலில் பலியெடுக்கப்பட்ட 25 ஆம் கால் நூற்றாண்டு நினைவு நாளை 2020 இல் நாம் ஒரு கணம் மீண்டும் எம் உறவுகள் மத்தியில் மீட்டுப் பார்க்கின்றோம்.

இந்தக் கொடுமையான நவாலி சென் பீற்றர்ஸ் ஆலய பலியெடுப்பு சர்வதேச சமூகத்தையே மிகவும் மனவருத்திற்கு உள்ளாக்கியதுடன் மக்களை சொல்லொணாத் துயரத்திற்கும் இட்டுச்சென்றது.

கடந்த 09.07.1995 இல் தமிழர்களின் வாழ்வில் - வரலாற்றில் நவாலியில் இரத்த ஆறு ஓடிய ஒரு கோரமான கொடிய நாளாகும். அன்று தான் நவாலி சென் பீற்றர் தேவாலயம் மற்றும் நவாலி ஸ்ரீகதிர்காம முருகன் (சின்னக்கதிர்காமம்) ஆலயம் என்பன அழிந்து அப்பாவிகளான 147 மக்களை காவுகொண்ட கரிநாள்.

வலிகாமம் பூராகவும் இடம் பெற்ற வான் தாக்குதலில் அதிர்ந்து கொண்டிருந்த வேளையில் மாலை நேரத்தில் இடம் பெயர்ந்துகொண்டிருந்த போது விமானப்படையினரால் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலில் ஓர் மோசமான இனப்படுகொலையாகும்.

முன்னோக்கிப்பாய்தல் எனப்பெயர் கொண்ட இராணுவ நடவடிக்கையை வலிகாமம் பகுதியில் தொடங்கிய இராணுவத்தினர் பலாலியில் இருந்தும் அளவெட்டியில் இருந்தும் மிகக்கொடூரமான முறையில் ஷெல் தாக்குதல்களையும் குண் டுத்தாக்குதல்களையும் தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்தனர்.



திடீரென 09.07.1995 அன்று வலிகாமம் தென் மேற்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் வடக்குப்பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள், ஆலயங்கள், பொது நிலையங்கள், அரச மற்றும் பொது நிறுவனங்களை நோக்கி காலை 5.20 மணியளவில் இருந்து விமானத் தாக்குதல்களும், ஷெல் தாக்குதல்களும் தாறுமாறாக நடத்தப்பட்டன.

அவ்வேளையில் சகல வீதிகளிலும் ஹெலிகொப்டர்கள் தாக்குதல்களாலும் அகோரமான ஷெல்தாக்குதல்களாலும் காயப்பட்டவர்களை, இறந்தவர்களை, காயமடைந்து இரத்தம் சிந்திக்கொண்டிருந்தவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வாகனங்கள் இருக்கவில்லை.

வாகனங்களை இயக்குவதற்கான எரிபொருள்களும் அற்ற பொருளாதார தடையான மந்தமான காலப்பகுதியாகும்.

இதேநேரம் காயமடைந்தவர்கள் ஏதோ ஒருவழியின் ஊடாக எடுத்துச் செல்லப்பட்டால் அவர்களை காப்பாற்ற மருத்துவர்களோ வைத்தியசாலைகளோ இயங்க முடியாத அவலநிலை.

வைத்தியசாலைகளிலும் மருந்துகளோ, வைத்தியர்களோ இல்லாத சூழலே காணப்பட்டது.

இறுதியில் காயமடைந்தவர்கள் சிகிச்சையின்றி இறந்த நிகழ்வுகளையும் நாம் இலகுவில் மறக்க முடியாது.

அவ்வேளைகளில் யாழ் நகரப் பகுதியில் இருந்து அராலி நோக்கி வந்து கொண்டிருந்த விமானம் தொடர்ச்சியாக 13 குண்டுகளை தான்தோன்றித்தனமாக பிற்பகல் 4.47 மணியளவில் மக்கள் ஒன்று கூடியிருந்த மேற்குறித்த இரு ஆலயங்கள் மீதும் வீசின அவ்வளவு தான். நவாலி கிராமம் ஒரு கணம் அதிர்ந்தது வீதிகள் தடைப்பட்டு, மரங்கள் முறிந்து வீழ்ந்து, அலறல் சத்தங்கள் ஓங்கி ஒலிக்க, வீடுகள் தரை மட்டமாக்கி, மதில்கள் வீழ்ந்து பாரிய புகை மூட்டம் காணப்பட்டது.

நவாலி சென்ற் பீற்றர்ஸ் தேவாலயமும் - நவாலி சின்னக்கதிர்காம முருகன் ஆலயமும் மாலை 4.47 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் அதிர்ந்தன - முற்றாக அழிந்து சிதைந்தன.

குடாநாட்டின் பல்வேறு இடங்களை சேர்ந்த சுமார் 147 பேர் அந்த இடத்திலேயே பலியானார்கள்.

இச்சம்பவத்தில் கையிழந்து கால் இழந்து, தலையிழந்து உடல் சிதறி குற்றுயிராகக் கிடந் தவர்களை எம்மால் இலகுவில் மறந்துவிட முடியாது.

அன்றைய தினம் மக்கள் தொண்டுப்பணியில் ஈடுபட்டு உணவு, குடிநீர் வழங்கிக் கொண்டிருந்த 48 தொண்டர்களும் அந்தந்த இடத்தில் துடிதுடித்து உயிரிழந்ததை மறக்க முடி யாது.

அன்றைய தினம் முற்றாக அழிவடைந்த நவாலி சின்னக் கதிர்காமம் கந்தன் ஆலயத்திலும் ஆலய பிரதம குரு சிவத்திரு மாரிமுத்து பத்மநாதன் தலைமையில் காலையிலும் மாலையிலும் 25 ஆம் ஆண்டினை நினைவுகூர்ந்து 25 ஒளி விளக்கேற்றி விசேட வழி பாடுகளும் இடம்பெறும். நவாலிப் படுகொலை தமிழர்களின் வாழ்வில் மறக்க முடியாத ஒரு துன்பியல் நிகழ் வாகும்.

**செல்வராஜா ரமேஸ்**




# இஸ்லாம் அடிப்படைவாதிகளுக்கு அவன்காட் நிறுவனத்தின் ஊடாக ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டதா?

## சம்பிக்க கேள்வி

(கொழும்பு)

**இஸ்லாம் அடிப்படைவாதிகளுக்கு அவன்காட் நிறுவனத்தின் ஊடாக ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டதா? என்பது தொடர்பாக அரசியல் அழுத்தங்கள் இல்லாத விசாரணையொன்றை ஆரம்பிக்க வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஸ்தாபிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு உறுப்பினர்களின் வாக்கு மூலங்கள் தற்போது பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

நானும், இது தொடர்பான எந்து வாக்குமூலத்தை வழங்கினேன். இதன்போது இஸ்லாம் அடிப்படைவாதம் மற்றும் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முன்கூட்டியே பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக நான் கூறினேன்.

விசேடமாக 2019, மே மாதம் மகிந்த ராஜபக்ஷ பேராதனை விகாரையொன்றுக்கு சென்றபோது அங்கிருந்த விகாராதிபதி கெப்பட்டியாகொட ஸ்ரீவிமல நாயக்க தேரரிடம் கருத்தொன்றை முன்வைத்திருந்தார்.

அதாவது, இந்த அடிப்படைவாதிகளுக்கு அரச புலனாய்வாளர்களால் சம்பளம் வழங்கப்பட்டதாகவும் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் அவர் ஏற்றுக்கொண்டிருந்தார்.

அப்படியானால் யாருக்கு அந்த அரசாங்கம் சம்பளம் வழங்கி தகவல்களை பெற்றுக்கொண்டது, பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் எவ்வாறான தன்மையுடையவை என்பது தொடர்பாக விசாரணை செய்ய முடியும். இதனை விசேட விசாரணையாக மேற்கொள்ள வேண்டும் எனவும் நான் கோரியிருந்தேன்.

அதேபோல், ராஜபக்ஷவினர் காலத்தில் அவன்காட் நிறுவனத்தின் ஊடாக சர்வதேச கடற் பாதுகாப்புத் துறையினருக்கு இலங்கையில் ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டதாகவும் தகவல்கள் வந்துள்ளன.

எனவே, அவன்காட் நிறுவனத்தால் வழங்கப்பட்ட இந்த ஆயுதப் பயிற்சியில் இஸ்லாம் அடிப்படைவாதிகளுக்கும் ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதா? என்பதையும் விசாரணை செய்ய வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# வாழ்க்கைச் செலவை கண்டித்து ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

அதிக வரிச் சுமை, அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு, சம்பளக் குறைப்பு மற்றும் தொழில்களை இழக்கச் செய்தலுக்கு எதிர்ப்பு, தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா நாளாந்த கொடுப்பனவு, அரச சேவையை இராணுவமயமாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வெட பிமே அபி (வேலைத் தளங்களில் நாம்) அமைப்பினர் நேற்று ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

கொழும்பு கோட்டை ரயில் நிலைய முன்றலில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் கலந்துகொண்டிருந்தார். அத்தியாவசியப் பொருட்கள் மீதான வரியை குறை, தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா நாளாந்த கொடுப்பனவை உடன் வழங்குக், அரச சேவைகளை இராணுவமயமாக்கலை நிறுத்துக, மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்குக, லீசிங் நிவாரணத்தை சட்ட ரீதியாக அமுல்படுத்துக போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

பல்வேறு காரணங்களால் பொது மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருவதாக வெட பிமே அபி அமைப்பின் தலைவர் சின்த்தக்க பண்டார தெரிவித்தார். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மரமும் சிகிச்சையும்!

"சேர் எங்க வீட்டுக் கொல்லைப் புறத்திலே இருக்கிற ஒரு மரத்திற்கு உடம்பு சரியில்லை. அநேகமாக அந்த மரத்திற்கு சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன். நீங்கள் கொஞ்சம் வந்து பார்த்தால் நல்லது'.

இப்படி யாராவது உங்களிடம் வந்து சொன்னால் நீங்கள் என்ன நினைப்பீர்கள்? சொல்பவரை நீங்கள் ஒரு மாதிரியாகப் பார்ப்பீர்கள்.

ஜப்பானிலே இப்படி யாராவது சொன்னால்... அங்கே இது ஆச்சரியமான விடயம் இல்லை. ஏன் என்றால் அங்கே மரங்களுக்கு அறுவை சிகிச்சை செய்கின்ற டாக்டர் ஒருவர் இருக்கின்றார். அவர் பெயர் தடாஹிகோ யாமானோ.

அவருக்கு இப்பொழுது 90 வயது ஆகின்றதாம். அங்கே எல்லோரும் அவரை மர டாக்டர் என்றே சொல்வார்களாம். அதாவது மரத்திற்கு வைத்தியம் செய்கின்ற டாக்டர்.

இனிமேல் பிழைக்காது...பட்டுப் போய்விடும் என்கின்ற நிலைமையிலே உள்ள மரங்களையெல்லாம் அவர் பிழைக்க வைத்துவிடுவாராம். பத்து பயிற்சி டாக்டர்கள் வேறு அவருக்குத் துணையாக இருக்கிறார்களாம்.

இதுவரைக்கும் 1000 மரங்களுக்கு மேலே அவர் காப்பாற்றியிருக்கின்றாராம். மரங்களுக்கு சிகிச்சை கொடுக்கிறதுக்கு அவர் சில விசேட வைத்திய முறைகளையெல்லாம் உருவாக்கியிருக்கின்றாராம்.

நாமெல்லாம் வைத்தியரிடம் போனால் உடனே எங்கள் கையைப் பிடித்துப் பார்த்து நாடி பார்த்து என்ன கோளாறு என்று கண்டு பிடிக்கிறார்களே...அது மாதிரி அவர் என்ன செய்வார் என்றால் ஆரம்பத்திலே உள்ளங்கையை வைத்து பார்த்து அந்த மரத்திலே என்ன கோளாறு என்பதை கண்டு பிடிப்பாராம்.

அவ்வளவு அனுபவம்.

"ஒரு மரத்துக்கு வைத்தியம் பார்க்க வேண்டும்... வாங்க என்று அவரை கூப்பிட்டால் உடனே அதற்கான கருவிகள், மருந்துகள் எல்லாவற்றையும் தயார் செய்து கொண்டு உதவியாளர்களையும் கூப்பிட்டுக் கொண்டு வாகனங்களிலே கிளம்பி வந்து விடுவாராம்".

அவர் வைத்தியம் செய்வது எப்படித் தெரியுமா? முதலிலே மரத்து மேலே 15 மீற்றர் உயரத்திற்கு உருக்குக் குழாய்களைக் கொண்டு சாரம் கட்டிக் கொள்கிறார். அதற்கு பிறகு மரத்திலே உளுத்துப்போன பகுதிகளை வெட்டி எடுக்கிறார் ... அல்லது சுரண்டி எடுக்கிறார். அதன் பின்பு அந்த இடத்திலே இவர், தான் சொந்தமாகத் தயார் செய்த விசேட மருந்து கலந்த ஒருவகை பசையை பூசுகிறார். பிசினி மாதிரி அது.

பாதிக்கப்பட்ட பகுதியிலே ஈரம் படாமல் பார்த்துக் கொள்கிறது அது. அடி மரத்தின் உள் பகுதியிலே மரம் உளுத்து ஒன்றுமில்லாமல் போயிருந்தால்... அந்த இடங்கள் மேலே வெளிப்புறத்திலே கம்பி வலையை சுற்றுகின்றார். அது மேலே ஒரு கலவையைப் பூசுகின்றார் அவ்வளவு தான்.

கொஞ்ச நாளிலே மரத்திற்குப் புத்துயிர் கிடைக்கின்றது.

மரங்கள் எல்லாம் இலகுவில் மடியாது என்கின்றார் அந்தப் பெரியவர்.

அவர் என்ன சொல்கின்றார் தெரியுமா?

"ஒரு மரம் தற்கொலை செய்து விட்டது என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அப்படி ஆகாது. சரியான சமயத்திலே நாம் கொஞ்சம் கவனித்து உதவி செய்தால் போதும். அதற்குப் பிறகு அது சொந்த பலத்திலே பிழைக்கும்" என்கின் றார்.

"இனி இந்த மரம் பிழைக்காது என்று நீங்களாக முடிவு செய்து கொண்டு மரத்தை வெட்டி விடாதீர்கள். மரங்களை வெட்டவே கூடாது" என்று கண்டிப்போடு சொல்கிறார் அவர்.

முன்பெல்லாம் அவரே மரத்தின் மேலே கிடுகிடு என்று ஏறி வைத்தியம் செய்ய ஆரம்பித்து விடுவாராம். இப்போது அவருக்கு வயதாகி விட்டதனால் அவருடைய உதவியாளர்கள் அவரை மரத்தின் மேலே போக விடுவதில்லை. அதனாலே அவர் இப்பொழுது என்ன செய்கின்றார் என்றால்... கீழேயே நின்று கொண்டு பைனாகுலர்ஸ் மூலமாக மேலே பார்க்கின்றார். இங்கே இருந்து கொண்டே அட்வைஸ் கொடுக்கின்றார். அவருடைய உதவியாளர்கள் மேலே போய் வைத்தியம் பார்க்கிறார்கள்.

வருங்காலத்திலே மரத்திற்கு வைத்தியம் செய்கின்ற டாக்டர்கள் இன்னும் அதிகமாக ஆனாலும் ஆகலாம். அதைப் பற்றி ஒரு கற்பனை இன்னும் ஒரு நூறு வருடம் கழித்து இது நடக்கிறதாக வைத்துக் கொள்ளுங்களேன்.

ஒருத்தர் வேகமாக ஓடி வருகின்றார் ஒரு மர டாக்டரிடம்.

"டாக்டர் ... எங்க தோப்பிலே இருக்கின்ற ஒரு மரத்திற்கு உடம்பு சரியில்லை... உடனே நீங்கள் வந்து பார்க்க வேண்டும்" என்கின்றார்.

டாக்டர் மெதுவாக தலை நிமிர்ந்து அவரைப் பார்த்து "என்ன மரம் அது?" என்கின்றார்.

"பூவரசு மரம்" என்கின்றார் வந்தவர். உடனே அவர்.

மன்னிக்கவும் அதற்கான டாக்டர் அடுத்த கட்டடத்திலே இருக்கின்றார். நான் புளிய மரத்திற்கான டாக்டர் அப்படி என்கின்றார்.

# பிரான்ஸில் முதன்முறையாக நகரசபை துணை முதல்வராக ஈழத்தமிழ்ப் பெண்



(பாரிஸ்)

பிரான்சில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் துணை முதல்வராக ஈழத்தமிழ்ப்பெண் செர்ஜியா மகேந்திரன் தெரிவாகியுள்ளார்.

மாநகரசபைத் தேர்தலில் 2 ஆம் சுற்றில் தெரிவாகிய பெனாய்ட் ஜிமெனெஸ் உடன் இணைந்து 50.84 வீத வாக்குகளை பெற்று, கடந்த 4 ஆம் திகதி பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

பிரான்சில் துணை முதல்வராக பதவியேற்ற முதல் ஈழத் தமிழர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த மாநகரசபைத் தேர்தலில் ஆதி பரமேஸ்வரி சதாசிவம் (பாண்டிச்சேரி) மற்றும் கார்த்திக் சந்திரமூர்த்தி ஆகியோரும் மாநகரசபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

93 ஆம் பிராந்தியத்தில் தமிழர்கள் செறிந்து வாழும் நகரில் ஒன்றான லாகூர்நெவ் நகர சபை உறுப்பினர்களாக ஈழத்தமிழர்களான சுகுர்ணா சிறிகணேசன், யாழினி சந்திரராசா, சபரினா கணேஸ்வரன், கிங்ஸ்ரான் ஞானநாயகம் ஆகியோர் தெரிவாகியுள்ளனர். (ஜ-4)

# ஆன்மீகம்



## நிச்சயம் வேண்டும் லட்சியம்!

(நேற்றைய தொடர்ச்சி)

கடலைக் கடந்து அக்கரைக்குச் சென்றால் அங்கு அசோகவனம் உள்ளது. அதில்தான் சீதாதேவி சிறை வைக்கப்பட்டிருக்கிறாள். கழுகாகிய எனக்கு நீண்ட கூரிய பார்வை உள்ளதால் சிறையில் இருக்கும் சீதையை இங்கிருந்தே காணுகின்றேன். வானர வீரர்களே! உங்களில் யாராவது ஒருவர் கடலைத் தாண்டிச் சென்றீர்கள் என்றால் சீதையைக் கண்டுவர முடியும் என்றான் சம்பாதி.

யார் கடலைக் கடந்து செல்லும் வல்லமை உடையவர் என்ற வினா வானர வீரர்களுக்குள் எழவே ஒவ்வொருவர் ஒன்றொன்று சொல்ல அந்தக் கூட்டத்திடையே அமைதியாக இருந்த அனுமனைப் பார்த்து ஜாம்பவான் சொன்னார்... அனுமனே! உன் ஆற்றல் அளிவிடற்கரியது! நீதியும், வாய்மையும் நிறைந்த நீ நினைவால் கூட மாதர்களைத் தீண்டாதவன். சுற்றும் சூரியனோடு சுற்றிப் படித்த நீ சற்றும் இதை உணரவில்லையே! ஆழியைக் கடந்து மீண்டும் வரும் ஆற்றல் உன்னிடமே உள்ளது.

ஜாம்பவான் சொன்ன சொற்கள் அனுமனுக்குத் தெளிவையும், பொலிவையும், வலிவையும் தந்து அவன் சக்தியைத் தூண்டின. இக்கதையை இந்திய இளைஞர்களுக்கு விவேகானந்தர் நினைவுபடுத்தி இளைஞர்களே! ஜாம்பவான் பணியைத் தான் நான் மீண்டும் செய்கிறேன். உங்களுக்குள் அசாதாரணமான ஆற்றல் அபரிமிதமாக உள்ளது. நினைவூட்டுவதே என் வேலை. நிறைவேற்றுவது உங்கள் கடமை என்றார்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களோடு அதிசயிக்கத்தக்க ஆற்றலான ஆறாவது அறிவையும் பெற்ற நாம் மூலையில் முடங்கி வேலையின்றி வேதனையிலும் விரக்தியிலும் வெறுமையிலும் வெம்பிப் போகலாமா?

ரஷ்ய அறிஞர் டால்ஸ்டாயிடம் ஒரு இளைஞன் வந்து ஐயா! எனக்கு உழைத்து வாழ ஆசைதான். ஆனால் மூலதனம் என்று எதுவும் இல்லை. நீங்கள் ஓரளவு பணம் கொடுத்தால் உபயோகமாக இருக்கும் என்றான். அதற்கு டால்ஸ்டாய் நூறு ரூபிள் தருகிறேன். அதற்கு ஈடாக நீ உன் விரல் ஒன்றைத் தரவேண்டும் என்றார். விரலையா? என்று விதிர் விதிர்த்த அவனிடம் மீண்டும் அறிஞர் ஆயிரம் ரூபிள் தருகிறேன் உன் காலைத் தந்துவிடு என்றார். இளைஞனுக்குத் தலை சுற்றியது.

தொடர்ந்து டால்ஸ்டாய் பத்தாயிரம் ரூபிள் தருகிறேன். இரு கண்களில் ஒன்றைத் தந்து விடுகிறாயா? என்றார். ஆளைவிட்டால் போதும். இவரை அண்டியதே ஆபத்து என்று எண்ணிய இளைஞன் புறப்படத் தயார் ஆனதும் புன்னகை பூத்தார் டால்ஸ்டாய். சகோதரனே! உன்னிடம் விலை மதிக்க முடியாத உறுப்புக்கள் இருக்கின்றன. அதுவே மூலதனம். அதைப் பயன்படுத்தி வாழ்க்கையை நடத்து. கல்லோடும் மண்ணோடும் பிறந்த ஆதிவாசிகளான நம் முன்னோர்கள் எந்த மூலதனத்தை வைத்து கண்ணெதிரே நாம் காணும் இந்த சிறந்த உலகத்தைச் சிருஷ்டித்தார்கள்?

இதையே இன்றைய கவிஞர் பாடுகிறார்.

**உன்னை முதலில் நம்பு! - அதுவே**<br>
**ஊன்றிப் படிக் கொம்பு!**<br>
**என்னை வடிக்கும் சிற்பி - நானே**<br>
**என்றொரு பாடம் கற்பி!**<br>
**அனைத்தும் விதிவழிக் கணக்கு! - என்றால்**<br>
**அமைந்த கால், கை எதற்கு?**<br>
**இனி ஒரு வேதம் எழுது! - நீதான்**<br>
**இலட்சிய மானுட விழுது!**

விடாமுயற்சி எனும் விதைகள்தான் வெற்றிக்கனிகளைத் தருகின்றன. எழுமின்! விழிமின்! குறிசாரும் வரை நில்லாது தொடர்மின்! என்றார் விவேகானந்தர்.

புகழ்பெற்ற அமெரிக்க ஜனாதிபதி கென்னடி பதவியில் இருந்தபோது அதிகாலையில் ஒருநாள் மாணவர் குழு ஒன்றைச் சந்தித்தார். உரையாடி மகிழ்ந்தார். மாணவர்களிடம் உங்கள் இலட்சியம் என்ன? என்று கேட்டார். ஒரு மாணவனின் பதில் அவரை கொஞ்சம் உலுக்கிவிட்டது. என் இலட்சியம் எதிர்காலத்தில் உங்கள் பதவியில் அமர்வது தான் என்றான் சிறுவன். அந்த மாணவனின் இளம் பருவ எண்ணம் இற்றுப் போய்விடவில்லை.

ஏனென்றால் அது அவன் எண்ணமோ, ஆசையோ அல்ல! தீர்மானிக்கப்பட்ட இலட்சியம்! குலைந்து போகாத குறிக்கோள். நாமெல்லாம் அறிந்த அமெரிக்க ஜனாதிபதி பில்கிளிண்டனின் இளமைப் பருவ நிகழ்வே அச்சம்பவம்! ஆணி அடித்தாற் போன்று உறுதியோடு ஒன்றில் ஈடுபட்டுச் செயல் புரிந்தால் வெற்றி நிச்சயம்! எழும் அலையும் வீசும் காற்றும் எப்போதும் திறமையான மாலுமியின் பக்கமே இருக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்ததுதானே!

# செய்தித்துளிகள்

## பலத்த காயங்களுடன் இருவரின் சடலங்கள் கங்கையில் மீட்பு

(பெல்மடுல்ல)

பெல்மடுல்ல தெவனகல கங்கையில் இருந்து இரண்டு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் போன்று காணப்படும் குறித்த இருவரின் உடல்களிலும் பல வெட்டுக்காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒருவரின் கழுத்தில் பலத்த காயமும் மற்றைய நபரின் தலையில் காயமும் காணப்படும் அதேவேளை அவரின் கால்களிலும் பல காயங்கள் காணப்படுவதாக பெல்மடுல்ல பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுக் காலை பூக்களை பறிப்பதற்காக அப்பகுதிக்கு வந்த நபரொருவர் வழங்கிய தகவலுக்கு அமையவே குறித்த சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் குறித்த இரண்டு சடலங்களும் இவ்வாறு கங்கையில் வீசப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதோடு, சம்பவம் தொடர்பிலான விரிவான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஜ-4)

## மேலும் 4 கடற்படையினர் குணமடைவு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 4 கடற்படையினர் பூரண குணமடைந்துள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அதன்படி நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி பூரண குணமடைந்த கடற்படையினரின் எண்ணிக்கை 892 ஆக அதிகரித்துள்ளது. (ஜ-4)

## இரு வைத்தியர்கள் மோதல்; இருவரும் படுகாயம்

(நிந்தவூர்)

இரு வைத்தியர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலினால் வைத்தியசாலை சொத்துக்கள் சேதமடைந்த சம்பவம் ஒன்று அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இம்மோதலினால் பாதிக்கப்பட்ட இவ்விரு வைத்தியர்களும் இரு வேறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்திய சாலையில் இடம்பெற்றுள்ளது. குறித்த வைத்தியர்களுக்கும் இடையே இருந்த நீண்டகால முறுகல் நிலையே இம்மோதலுக்கு பிரதான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 80 | 50 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 135 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 180 | 300 |
| தக்காளி | 130 | 150 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 110 | 50 |
| கோவா | 140 | 120 | 120 | 120 |
| கரட் | 120 | 150 | 140 | 60 |
| பூசணி | 50 | 40 | 40 | 60 |
| புடோல் | 50 | 80 | 60 | 120 |
| வாழைக்காய் | 120 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 160 | 120 | 240 | 160 |
| பெரிய வெங்காயம் | 60 | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 220 | 220 | 220 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 100 | 120 |
| பயற்றங்காய் | 80 | 100 | 60 | 60 |
| லீக்ஸ் | 140 | 100 | 140 | 120 |
| பீற்றூட் | 100 | 110 | 100 | 120 |
| கறிமிளகாய் | 180 | 200 | 240 | 240 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 140 | 160 |
| போஞ்சி | 180 | 130 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 50 | 60-80 |
| இராசவள்ளி | -- | 250 | 300 | 280 |
| வெங்காயப்பூ | 250 | 240 | -- | -- |
| முள்ளங்கி | 120 | 80 | -- | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 60 | 50 | 60 |





## நரியை வென்ற கழுதை

ஒருநாள் ஒரு காட்டுப் பகுதியில் கழுதை ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது. அதை கவனித்துக் கொண்டிருந்த ஓநாய் ஒன்று கழுதையை அடித்து தின்னும் நோக்கத்துடன் அதன் மீது பாய்ந்தது.

தனக்கு வந்த ஆபத்தைக் கண்டு பயந்த கழுதை . ஓநாயை எதிர்த்து சண்டை போடுவது கடினம். அதனால் ஏதாவது ஒரு தந்திரம் செய்து தான் சமாளிக்க வேண்டும் என தீர்மானித்தது.

ஓநாயின் பாய்ச்சலின் போது சற்று விலகிக் கொண்டு. ஓநாயே உன்னுடைய வலிமையின் முன்னால் நான் எம்மாத்திரம். நான் இன்று உனக்கு இரையாகப் போவது உறுதி. இதை யாராலும் தடுக்க முடியாது. நானும் உமக்கு இரையாக தயாராக இருக்கிறேன். அதற்கு முன்னால் நான் சொல்லக்கூடிய விடயத்தை தயவுசெய்து கேட்க வேண்டும். என வேண்டிக் கொண்டது.

நீ என்ன சொல்லப் போகிறாயோ. அதைச் சீக்கிரம் சொல். என்றது ஓநாய். ஓநாயே. என் காலில் பெரிய முள் ஒன்று குத்திவிட்டது. முள்ளை எடுக்க நான் எவ்வளவோ முயற்சி செய்தும் முடியவில்லை. காலில் முள் உள்ள நிலையில், நீங்கள் என்னை அடித்து சாப்பிட்டால், அந்த முள் உங்கள் தொண்டையில் மாட்டிக் கொள்ளும், அது உமக்குக் கடுமையான வேதனையைத் தருவதுடன் உங்கள் உயிரையும் வாங்கி விடும். அதனால் முதலில் என் காலில் இருக்கும் முள்ளை



எடுத்துவிட்டு பிறகு நீங்கள் என்னை அடித்துத் தின்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என கழுதை கூறியது. ஓநாயும் ஒத்துக் கொண்டது. கழுதை தனது பின்னங்கால்களைத் திருப்பி காண்பித்தது.

முள் இருக்கிறதா? என முள்ளை தேடும் வேளையில், அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கழுதை பின்னங்கால்களால் ஓநாயைப் பலமாக உதைத்தது. கழுதையின் உதை தாங்காமல் ஓநாய் துடிதுடித்து ஓடியது. அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கழுதை வேகமாக ஓடி தப்பித்துக் கொண்டது.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## வீரப்பரம்பரை

②



தொண்டைமண்டலம் என்று சொல்லப்படுகின்ற சென்னை, செங்கல்பட்டு, சித்தூர், வட ஆற்காடு போன்ற நகரங்களும் கூடவே உறையூர், காவிரிப்பூம்பட்டினம், தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், பழையாறை போன்ற நகரங்களும் சங்க காலத்தில் சோழர் வசமிருந்தன.

அதேசமயம், பாண்டியர் வசம் காவிரியின் தெற்குப் பகுதி முதல் ஆனைமலைக்குக் கிழக்குப்பகுதி, கீழைக்கடற்கரை, குமரி ஆகிய பகுதிகளும் சேரர்வசம் இன்றைய கேரளப் பகுதியும் கொங்கு மாவட்ட நகரங்களும் இருந்தன.

குடகுமலைப்பகுதி, நீலமலைப்பகுதி, தென் கர்நாடகா ஆகியவை கோசர்களாலும் மைசூரின் தெற்கு மற்றும் மையப்பகுதி கங்கர்களாலும் ஆளப்பட்டன.

மூவேந்தர்களும் சங்கப் பாடல்களில் வெவ்வேறு விதமான பெயர்களில் பாடப்பட்டுள்ளார்கள். சோழர்கள் சென்னி, செம்பியன், வளவன், கிள்ளி என்றழைக்கப்பட்டனர்.

உறையூர், காவிரிப் பூம்பட்டினம் போன்ற நகரங்கள் சங்ககாலச் சோழர்களின் தலை நகரங்களாக இருந்தன. இதில் உறையூர் முதல் தலை நகராகவும் துறைமுக நகரமான காவிரிப் பூம்பட்டினம் இரண் டாவது தலைநகராகவும் இருந்திருக்கின்றன.

சங்ககாலத்திற்குப் பிறகு சோழர் தலைநகரங்களாக பழையாறையும் உரகபுரமும் இருந்தன. (பழங்காலத்தில் குடந்தை நகரின் ஒரு பகுதியும் தாராசுரமும் பட்டீஸ்வரமும் இன்னும் சில கிராமங்களும் இணைந்து பழையாறை என்றழைக்கப்பட்டன).

பிற்காலச் சோழர் ஆட்சியை மலரச் செய்த விஜயாலயன் ஆட்சிக் காலத்திலிருந்து தலைநகர் அந்தஸ்து தஞ்சாவூருக்கு வழங்கப்பட்டது.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னால் ஆட்சியிலிருந்த வெளிநாட்டு மன்னர் மற்றும் மக்களின் கலை, கலாசாரம் ஆகியவற்றை அறிந்துகொள்ள ஏராளமான ஆதாரங்கள் கிடைக்கின்றன. உதாரணமாக, கி.மு. 356 இல் பிறந்து மசிடோனியாவை ஆண்ட மகா அலெக்சாண்டரின் வாழ்க்கையைப் படிக்க வேண்டுமென்றால் ஆயிரம் பக்கங்களுக்கு அதிகமாகத் தகவல் கொட்டிக் கிடக்கிறது.

ஆனால் தமிழ்நாட்டின் துர்ப்பாக்கியம் கிறிஸ்து பிறப்புக்குப் பிறகு தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் பற்றிய தகவல்கள்கூட மிகக் குறைவாகவேயுள்ளன. இந்நிலையில் சங்க கால மன்னர்கள் பற்றித் தெரிந்து கொள்வதற்கு நம்மிடையே மிகக் குறைந்த ஆதாரங்களே இருக்கின்றன.

சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்கிற சங்க கால பாண்டியன் மன்னரிடமிருந்து (இவரே சங்க காலத்துக் கடைசி பாண்டிய மன்னராக அறியப்படுகிறார்) வேள்விக்குடி என்கிற ஊரைக் களப்பிரர் ராஜ்ஜியம்தான் தமிழகத்தில் நடந்தது.

பாண்டியன் உக்கிரப் பெருவழுதி, சோழன் செங்கணான், சேரமான் கோக்கோதைமார்பன், கொங்கு நாட்டுக் கணைக்கால் இரும்பொறை போன்றோர் கடைச்சங்கக் காலத்தின் இறுதியில் ஆட்சி செய்த மூவேந்தர்கள்.

மூவேந்தர்களையும் அழித்து களப்பிரர்கள் ஆட்சிக்கு வந்ததால் சோழர்களின் வரலாற்றில் அந்த இடைப்பட்ட காலம், நீண்ட இடைவேளை என்று தான் சொல்ல வேண்டும். அடுத்து பல நூற்றாண்டுகளுக்கு சோழர்களைப் பற்றிய தகவல்கள் வரலாற்றில் இல்லவே இல்லை.

சங்ககாலத்தில் ஒரு சில களப்பிரர்கள் குறுநில மன்னர்களாக இருந்தது போக, மொத்தத் தமிழகமும் அவர்கள் வசம் சென்றது தமிழக வரலாற்றின் மிகப்பெரிய திருப்பம்.

களப்பிரர்கள் காலத்தில் சைவ, வைணவச் சமயங்கள் நலிந்து போய் முழுக்க முழுக்க சமணர்களின் ஆட்சி தான் நடந்தது. இவர்கள் ஆட்சியில் சோழர்கள் பற்றிப் பேச்சு மூச்சு இல்லை.

இறுதியாக, களப்பிரர்களைப் பழிவாங்கிடப் பாண்டியர்கள் நீண்ட காலமாகத் தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். வடபகுதியான தொண்டை நாட்டை ஆண்டுகொண்டு இருந்த பல்லவ மன்னரான சிம்ம விஷ்ணுவும் களப்பிரர்களை விரட்டத் தயாராக இருந்தார். இந்த இரு மன்னர்களால் தான் களப்பிரர்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

கி.பி 436 இல், இலங்கையின் சில பகுதிகளில் பாண்டியர்களின் ஆட்சி நடைபெற்றது. இதனால் வலுப்பெற்ற பாண்டியர்கள், தமிழகத்திலும் தங்கள் ஆட்சியை நிலை நிறுத்த முடிவு செய்தனர்.

கி.பி.575 இல், கொடுங்கோன் என்கின்ற பாண்டிய மன்னர் களப்பிரர்களின் ஆட்சிக்கு ஒட்டு மொத்தமாக முடிவு கட்டினார்.

அதே காலகட்டத்தில், பல்லவ அரசரான சிம்ம விஷ்ணு சோழ நாட்டை களப்பிரர்களிடமிருந்து வென்றதாகப் பல செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

(தொடரும்)

உன் மனசாட்சியே, உலகத்தைப் பார்க்கிற பெரிதும் உண்மையான நீதிபதி.

~ மெக்கலின்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## முட்டையிடாத கோழிகளும் கூரை ஏறிக் கொக்கரிக்கின்றன

தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாத்தல் என்ற பெயரில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் நாள்தோறும் விடுகின்ற அறிக்கைகளும் கருத்துக்களும் தமிழ் இனத்தைச் சீண்டுவதாக இருக்கிறது.

தொல்பொருள் மரபுரிமையைப் பாதுகாத்தல் என்ற ஜனாதிபதி செயலணி முழுக்க முழுக்க சிங்களவர்களை மட்டும் கொண்டது.

அதிலும் எல்லாவல மேதானந்த தேரர் போன்ற பேரினவாதத்தின் ஊதுகுழல்களும் குறித்த செயலணியில் இருந்து கொண்டு தாம் நினைத்த பாட்டில் கருத்துரைக்கின்றனர்.

இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்பதை வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துரைத்திருந்தார்.

பொதுவில் தமிழ் மக்களின் உரிமை பற்றி தமிழ் அரசியல்வாதிகள் பேசிவந்த போதிலும் இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்பதை ஆதாரபூர்வமாக அச்சமின்றி துணிந்து முன்வைத்த பெருமை நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனையே சாரும்.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்; இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்கள் எனக் கூறி வருவது, இலங்கை சிங்களவர்களின் நாடு என்று மார்தட்டுபவர்களுக்கு மிகப் பெரும் தலையிடியைக் கொடுக்கிறது.

இந்நிலையில் இலங்கை சிங்களவர்களின் நாடு என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் அரிதாக இருக்கின்ற காரணத்தால், தமிழர்களின் பூர்வீக வரலாற்றைப் பேசுகின்ற தொல்லியல் சான்றுகளைத் தம் வசமாக்கும் திட்டத்தை சிங்களப் பேரினவாதம் முன்னெடுத்துள்ளது.

இதன் ஓர் அங்கம்தான் முல்லைத்தீவு நீராவியடி செம்மலை பிள்ளையார் ஆலயத்தில் நடந்த அத்துமீறலும் திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் நடந்த ஊடுருவலுமாகும்.

இத்தகைய அடாவடித்தனங்களை தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு எதிர்த்தபோது அது கண்டு ஏங்கியவர்கள் இப்போது தொல்லியல் மரபுகளைப் பாதுகாத்தல் என்ற பெயரில் புதுவியூகம் அமைத்து நிற்கின்றனர்.

இங்குதான் எல்லாவல மேதானந்த தேரர் இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் கட்டுவித்த திருக்கோணேச்சரத்தை பௌத்த விகாரை எனக் கூறுகின்றார்.

தொல்லியல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது உண்மை.

அதற்காக ஓர் இனத்தின் வரலாற்றுச் சான்றை தங்களுடையதென உரிமை கோருவது எந்த வகையிலும் நியாயமாகாது.

ஆக, முட்டையிட்ட கோழி கொக்கரிக்கும் போது முட்டையிடாத கோழிகள் கூரை ஏறி நின்று கொக்கரிப்பதில் எந்த அர்த்தமும் இல்லை.

இந்தக் கொக்கரிப்புகளால் குழப்பம் ஏற்படுமே தவிர, முட்டையிடாத கோழிகள் முட்டைக்கு உரிமை கோர முடியாது.

# வடக்கில் வீதி விபத்துக்களை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்

## வடக்கு ஆளுநர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**வடமாகாணத்தில் தொடர்ச்சியாக விபத்துக்கள் இடம் பெறுவதை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்த ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ், பாதுகாப்பான போக்குவரத்து நடைமுறைகளை பின்பற்றுவதற்காக பொலிஸாருடன் இணைந்து அதிகாரிகளும் உரிய நடவடிக் கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.**

அத்துடன் விசேடமாக முக்கிய வீதிகளில் உடன் அமுலுக்கு வரும் வகையில் கண்காணிப்பு கமராக்களை பொருத்துமாறும், கனரக வாகனங்கள் நகரங்களினுள் பிரவேசிப்பதற்கான நேரக் கட்டுப்பாட்டை அமுல்படுத்துமாறும் ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

வட மாகாணத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் வீதி விபத்துக்கள் மற்றும் சட்ட ஒழுங்குகளின் நிலைமைகள் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று வட மாகாண ஆளுநர் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வட மாகாண ஆளுநர் திருமதி. பீ.எஸ்.எம். சாள்ஸ் தலைமையில் இடம்பெற்றது.

அக்கலந்துரையாடலில் வடமாகாணத்தின் பொலிஸ் உயர் அதிகாரிகள், வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள், மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள், வட மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை அதிகாரிகள் மற்றும் உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். அவர் மேலும் தெரி விக்கையில்,

வீதி விபத்துக்களைத் தவிர்த்து அதனூடாக ஏற்படும் உயிரிழப்புக்களைத் தடுப்பதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுத்த வேண்டும் என்றும் உரிய தகவல்கள் கொண்ட வீதி அறிவித்தல் பலகைகள் வைகக்கப்பட வேண்டும் என்றும் கால்நடைகள் வீதிகளில் நடமாடுவதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வீதிப்புனரமைப்பை இரவு நேரங்களில் செயற்படுத்துவதன் மூலம் போக்குவரதது நெருக்கடிகளையும், விபத்துக்களையும் தடுக்க முடியும் என்றும் வீதியோரங்களிலுள்ள மரக்கிளைகளை இனங்கண்டு அவற்றை அகற்ற வேண்டும் என்றும் அவா தெரிவித்தார். (ஜ-4)

## களனிப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பம்

(கொழும்பு)

களனிப் பல்கலைக் கழகத்தின் நான்காம் ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பிக் கப்படவுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள பல்கலைக்கழக நிர்வாக அதிகாரி, அறிவியல், வர்த்தகம், முகாமைத்துவம், கணனி மற்றும் தொழில்நுட்ப பீடங்களின் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியுமென தெரிவித்துள்ளார்.

இந்தப் பீடங்களில் உள்ள அனைத்து மாணவர்களும் எதிர்வரும் 12ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை விடுதிகளுக்கு சமுகமளிக்க வேண்டுமெனவும் குறித்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலையடுத்து பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை


**யாழ்.பிரதேசத்தில்** பலாலிசந்திபிரதேசம், வயாவிளான் ஒரு பகுதி, பலாலி விமான நிலைய பிரதேசம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில் கிறிஸ்தவகுளம்**, புளியங்குளம், வாரிக்குட்டியூர், சங்கரபுரம் ஆகிய இடங்களிலும்

மேலும் **மன்னார் பிரதேசத்தில்** சிறுநாவற் குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் Palmyrah house, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ்தொழிற்சாலை, Palmyrah house கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத்தொழிற்சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத் தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களில் காலை 6 மணியிலிருந்து மாலை 3 மணி வரையான காலப்பகுதியில் காலையில் இரண்டு மணித்தியாலங்களும் பிற்பகலில இரண்டு மணித்தியாலங்களும் மின்சாரம் தடைப்படும்.

## சத்திய தரிசனம்

### இணைபிரியாத நண்பர்கள்



❖ நம் வாழ்வை திட்டமிட்டு நாமே அமைத்துக் கொள்ள வேண்டும். பிறர் அபிப்பிராயத்திற்காக வாழ்வது கூடாது.

❖ மனித இதயத்தில் ஆசை, கோபம் போன்ற பெருந்தீ எரிந்து கொண்டு இருக்கிறது. இதனை நெறிப்படுத்தாவிட்டால் மனித சமூகமே அழிந்து விடும்.

❖ சிறுகல்லைக் கூட கடவுள் நிலைக்கு உயர்த்த முடியும். ஆனால், கடவுளைக் கல்லாக கீழே கொண்டு வருவது கூடாது.

❖ நமக்குத் தேவையானதை வழங்க கடவுள் எப்போதும் தயாராக இருக்கிறார். ஆனால், அதை பெறுவதற்கு நம்மை இன்னும் தகுதிப்படுத்திக் கொள்ளவில்லை.

❖ இளமையிலேயே நா ருசியைக் கட்டுப்படுத்துவது நல்லது. இதனால், நோய்கள் அண்டாமல் ஆரோக்கியமாக வாழமுடியும்.

❖ துன்பத்திலும் இன்பத்தைக் காண்பவனே சிறந்தவன். அத்தகையவனைக் கடவுளுக்கு நிகராக ஒப்பிடலாம்.

❖ அமைதியும், ஆனந்தமும் இணைபிரியாத நண்பர்கள். தியானத்தின் மூலம் இவர்களின் நட்பைப் பெற முடியும்.

# இராசிபலன்

09.07.2020
ஆனி 25, வியாழக்கிழமை
சதுர்த்தி முற்பகல் 11.30 மணிவரை
சதயம் பின்னிரவு 4.51 மணிவரை
சுபநேரம் 7.28 - 8.58 மணிவரை
இராகுகாலம் 1.28 - 2.58 மணிவரை
சந்திராஷ்டமம் - ஆயிலியம்
வளவன்


மேஷம்

எதிர்கால நலன் கருதிய முயற்சிகள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.


ரிஷபம்

தொலைபேசி வழியில் பொன்னான தகவலொன்று வந்து சேரலாம், மற்றவர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள்.


மிதுனம்

உங்களின் முன்னேற்றம் கண்டு மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.


கடகம்

மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செய்வது நல்லது, குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.


சிம்மம்

சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


கன்னி

எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.


துலாம்

பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.


விருச்சிகம்

வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.


தனுசு

குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.


மகரம்

சொன்ன சொல்லைக் காப்பாற்றும் எண்ணம் உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.


கும்பம்

பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள்.


மீனம்

தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் சிறு மாற்றங்கள் செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், போசன சுகமுண்டு.

எடுப்பதைக் கொடுக்கும் வானம் போல இனிதே வாழ்

# வெலிக்கடை சிறைக்கைதிக்கு கொரோனா;
# 210 பேருக்கு தொற்று இல்லை
## அனில் ஜாசிங்க தகவல்

(கொழும்பு)

**வெலிக்கடைச்சிறைச்சாலையில் கொரோனாத்தொற்று சந்தேகத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளில், இதுவரை 210 பேருக்கு கொரோனாத்தொற்று இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.**

வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள கைதி ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருப்பது நேற்று முன்தினம் உறுதி செய்யப்பட்டதையடுத்து குறித்த நபருடன் நெருங்கிப் பழகியவர்களை இனங்கண்டு அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த கைதியுடன் தொடர்புடைய ஏனைய கைதிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்

இந்நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களில் 210 பேருக்கு தொற்றில்லை என உறுதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



# இன முரண்பாட்டை ஏற்படுத்த அரசு முயற்சி
## ஸ்ரீநேசன் குற்றச்சாட்டு



(மட்டக்களப்பு)

நாட்டில் மீண்டும் இன முரண்பாட்டினை ஏற்படுத்தி பகையினை உருவாக்கும் செயற்பாடே இந்த அரசாங்கத்தின் செயற்பாடாகவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளருமான ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தொல்லியல் இடங்களை அடையாளம் காணுதல் என்ற பெயரில் தமிழர்களுக்கு தொல்லை கொடுக்கின்ற நிகழ்ச்சித்திட்டம் அரசாங்கத்திடம் இருக்கின்றது. அந்த அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 56 இடங்கள் தொல்லியல் இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

தாந்தாமலை, குடும்பிமலை, குசனாமலை, வேற்றுச்சேனை, சத்துருக்கொண்டான், ஈரலக்குளங்கள் என இந்த 56 இடங்களும் இந்த அரசினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த இடங்களை உடனடியாக பார்வையிடுவதும் எல்லைகளை அடையாளப்படுத்துவதுமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வேற்றுச்சேனையில் நடைபெற்ற சம்பவத்தினை எடுத்துக் கொண்டால் தனியார் காணியொன்றினை அதுவும் தொல்லியல் என்ற அடிப்படையில் பௌத்த துறவிகளும் இராணுவத்தினரும் அந்த எல்லைப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த மக்கள் வெள்ளம் உட்பட பல்வேறு அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்கள் அவர்களை வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சும் செயலாகவே இதனைப் பார்க்கின்றோம்.

காணாமல் போனவர்கள் எங்கு இருக்கின்றார்கள், எங்கு புதைக்கப்பட்டார்கள், அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் மக்கள் அழுது கொண்டிருக்கும் நிலையில் மேலும் மண்ணை அபகரிக்கும் நோக்கில் வேற்றுச்சேனையில் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் இன முரண்பாடுகளை ஏற்படுத்தி மீண்டும் பகைமையினை உருவாக்குகின்ற ஒரு செயற்பாடாகவே இந்த அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இந்த தொல்லியல் செயலணியில் பௌத்தர்களே இருக்கின்றார்கள். இலங்கையில் தொல்லியல் இடங்களில் இந்துக்கலாசார இடங்களும் உள்ளன என்பதை அவர்கள் மறந்துள்ளனர். இது ஒருபக்க செயற்பாடாகவே உள்ளது. தமிழ் மக்களை மீண்டும் ஒரு நெருக்கடியான நிலைக்கு தள்ளப் போகின்றது என்பது எடுத்துக்காட்டாக இருக்கின்றது என அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# இனி பாடசாலை வாகனங்கள் மஞ்சள் வர்ணத்தில்
## மகிந்த அமரவீர கூறுகிறார்

(கொழும்பு)

பாடசாலை வாகனங்களிற்கு எதிர்காலத்தில் குறிப்பிட்ட வர்ணக் குறியீட்டை கட்டாயமாக்க தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

பாடசாலை சேவையில் ஈடுபடும்வாகன உரிமையாளர் சங்கத்துடனான கலந்துரையாடலின் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாடசாலை வாகனங்களுக்கு வர்ண குறியீடு எதிர்காலத்தில் கட்டாயமாக்கப்படும் என்றும் பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்கள் அனைத்தும் மஞ்சள் வர்ணம் பூசப்பட வேண்டுமென தான் முன்மொழிந்துள்ளதாகவும் தெரிவித்தார். (ஜ-4)

## முன்னாள்...

யைச் சேர்ந்த தங்கராசா தேவதாசன் (வயது-43) என்ற முன்னாள் போராளியே உயிரிழந்தவராவார்.

கடந்த 3ஆம் திகதி மீன் ரின்னுக்குள சி4 வெடிமருந்தைப் பயன்படுத்தி நாட்டு வெடிபொருள் செய்தபோதே வெடி வீபத்து ஏற்பட்டது என்று பளைப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இச்சம்பவத்தையடுத்து அவரது மனைவி கைது செய்யப்பட்டார். இந்த வெடி விபத்தையடுத்து முன்னாள் போராளிகள் பலர் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3,100)

## உத்தியோகத்தர்...

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

யாழ். மாவட்டச் செயலகத்தில் மத்திய சுற்றாடல் அதிகார சபையில் கடமையாற்றி வரும் மல்லாகத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் பிரகாஸ் என்ற குறித்த உத்தியோகத்தர் வழமைபோன்று நேற்றுக் காலை கடமைக்காகச் சென்றுள்ளார்.

இந்நிலையில் அவரைப் பின்தொடர்ந்து இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் மாவட்டச் செயலக வாயிலுக்கு அருகில் வழிமறித்து அவர் மீது வ்ாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

குறத்த தாக்குதல் சம்பவத்தில் கையில் வாள்வெட்டுக் காயத்திற்கு உள்ளான உத்தியோகத்தர் பாதுகாப்புத் தேடி மாவட்ட செயலகத்தினுள் ஓடியுள்ளார். அப்போதும் அவரைப் பின்தொடர்ந்து மாவட்டச் செயலக வளாகத்தினுள் புகுந்த குறித்த உத்தியோகத்தர் மீது தாக்குதல் மேற்கொண்டனர்.

பின்னர் வெளியே நின்றிருந்த மோட்டார் சைக்கிளையும் குறித்த கும்பல் சேதமாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த உத்தியோகத்தர் சிகிச்சைக்காக யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பட்டப் பகல் வேளையில் நடந்த குறித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில் சம்பவத்தையடுத்து மல்லாகத்தைச் சேர்ந்த ஐவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,18,32,78,114)

## வன்முறையுடன்...

களைக் கண்டு விட்டு தப்பி ஓட முற்பட்ட போதே இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட இருவரும் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் விடுவிக்கப்படுவார்கள் என்றும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ம-3)

## கடலோர பிரதேச...

களை நிறைவு செய்வதற்கு கட லோரங்களில் செல்வதற்கான அனுமதிக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

குளங்கள் மற்றும் கடலோரங்களில் தந்தையை இழந்த உறவுகள் அவர்களுககான வருடாந்த நினைவுகூரலையும் அதற்கான பிதிர்க்கடன்களையும் நிறைவேற்றி வருவது வழமை.

ஆனால் கொரோனா தொற்றை கட்டுப்படுத்த நாடு முழுவதும் சுகாதார விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் குளங்கள் மற்றும் கடலோரங்களில் இத்தகைய பிதிர்க்கடன்களைச் செய்வதற்கு சுகாதார தரப்பினர் அனுமதி மறுத்திருந்தனர்.

எதிர்வரும் 20 ஆம் திகதி குறித்த நினைவுகூரும் தினமான ஆடி அமாவாசைத் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதால் அத்தினத்தை அனுஷ்டிப்பவர்கள் தமது தந்தையருக்கு பிதிர்கடனை நிறைவேற்றுவதற்கு பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிட்டிருந்தது.

இந்நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றையதினம் குறித்த தரப்பினரது பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கும் முகமாக அமைச்சரவையில் அது தொடர்பில் பிரஸ்தாபித்திருந்தார்.

இதையடுத்து குளங்கள் குறுகிய பரப்பை கொண்டுள்ளதால் கொரோனா தொற்று பரவும் சாத்தியம் அங்கு அதிகமாக இருப்பதால் அதற்கு பதிலாக கடலோரங்களில் அத்தகைய கிரிகைகளை மேற்கொள்வதற்கு அமைச் சரவை அனுமதி அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## அல்வாயில் வாள்...

னர்.

நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அல்வாய் தெற்கு பகுதியைச் சேர்ந்த இரு பகுதியினருக்கிடையில் ஏற்பட்ட பகைமை வாள்வெட்டில் முடிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் இரு பகுதியைச் சேர்ந்த நால்வர் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3,60)

## தமிழர்களுக்கு...

வால் திணிக்கப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## கஞ்சா கொரோ...

கொள்ள வேண்டும் என கடற்படையின் ஊடகப் பேச்சாளர் லெப்டினனட் கொமாண்டர் இசுறு சூரிய பண்டார தெரிவித்தார்.

காங்கேசன்துறை கடற்படை தளத்தில் ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் போதைப்பொருள் பாவனையினை கட்டுப்படுத்துவதற்கு கடற்படையினர் மற்றும் கடலோர காவற்படையினர் சிறந்த முயற்சிகளை எடுத்து வருகின்றனர். தற்போது இலங்கைக்குள் சட்ட விரோதமாக நுழைய முற்படும் சட்ட விரோத செயற்பாடுகளுடன் தொடர்புடைய நபர்களினால் கொரோனா தொற்று பரவும் அபாயமும் உள்ளது.

வடக்கு மக்களிடம் நான் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். உங்களுக்கும் சமூகப் பொறுப்பு அவசியமானது.

போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் நீங்கள் விழிப்பாக இருக்க வேண்டும். போதைப் பொருள் கடத்தலை முறியடிக்க கடமையாற்றும் கடற்படை மற்றும் முப்படையினருக்கும் உதவி புரிவதன் மூலமே குறித்த போதைப்பொருள் கடத்தலினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம்.

இந்த போதைப்பொருள் கடத்தல் தொடர்ச்சியாக இடம்பெறுமாக இருந்தால் வடக்கில் கொரோனா தொற்று மீண்டும் ஏற்பட அதிக வாய்ப்பு காணப்படுகின்றது. எனவே இந்த விடயத்தினை மக்களும் கருத்தில் எடுக்க வேண்டும் என்றார். (ம-3)

## மின்சாரக் கட்ட...

யாளர்களின் சுமையை அரசு சுமக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

ஊரடங்கு உத்தரவின் போது மின்சார கட்டணப் பட்டியல் பிரச்சினைகள் தொடர்பான ஐந்து உறுப்பினர்கள் குழு வழங்கிய பரிந்துரை அறிக்கை நேற்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டவற்றைத் தாண்டி, பொதுமக்களுக்கு அதிகபட்ச நிவாரணம் வழங்க அரசு முடிவு செய்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

குழுவின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை திறைசேரிக்கு அனுப்பப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வீடுகளுக்குள்ளேயே தங்கியிருக்குமாறு அரசால் ஆலோசனை வழங்கப்பட்டமையால் அதிகரித்த மின்சாரக் கட்டணத்தின் ஒரு பகுதியை திறைசேரியின் ஊடாக செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக மின்சக்தி அமைச்சர் தெரிவித்தார்.

அதன்படி, ஒரு நபர் ஏற்கெனவே அதிக பணம் செலுத்தியிருந்தால், அவர்கள் அடுத்த கட்டணத்தை திருப்பிச் செலுத்தவோ அல்லது செலுத்தாமலோ விட முடியும்.

மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த சலுகை காலம் வழங்க முன்மொழியப்பட்டது என்றும் அமரவீர கூறினார். (ம-3)

## வீடு வீடாக வேட் ...

ஆணையம் வெளியிட்டுள்ளது.

வேட்பாளர்கள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள் வீடு வீடாக தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ளமுடியாது உட்பட 18 முக்கிய விதிமுறைகளை ஆணையம் வெளியிட்டுள்ளது.

வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட திகதி முதல் மற்றும் தேர்தல் முடிவுகள் வெளியான 7 நாட்களில் ஊர்வலங்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இந்த காலகட்டத்தில் மத அனுசரிப்புகள் அனுமதிக்கப்படும், எனினும் அவை தேர்தலைக் கருத்தில் கொண்டு நடத்த முடியாது.

வேட்பாளர்களின் ஆதரவாளர்களால் வீட்டுக்கு வீடு தேர்தல் பிரசாரம் மேற்கொள்வதற்கு அதிகபட்சம் 3 நபர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றார். (ம-3

## முல்லை...

கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு, களுத்துறை, நுவரெலியா, மாத்தளை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலேயே புதிய பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்தப் பல்கலைக் கழகங்களை அமைப்பதற்கான திட்டங்களை தயாரிப்பதற்காக, பேராசிரியர்களைக் கொண்ட ஐந்து குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உதவித் தலைவர், பேராசிரியர் ஜனித லியனகே தெரிவித்தார். (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 08-07-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2472
K 29 32 49 53

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08-07-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1035
H 8 6 1 9 9 3

மெகா பவர்
திகதி 08/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 544
M 23 27 31 51 71

செவன
திகதி 08/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 276
T 03 07 10 56

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 347 திகதி 08.07.2020 வர்ணம் நீலம்
S 24 36 69 7
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 55,112,232
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

ராசி
வெற்றி வாரம் 2855 வர்ணம் பச்சை திகதி 08.07.2020
வெற்றி இலக்கங்கள் 06 27 34 40 கும்பம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,501,554
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 974
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,290,640/-
2020.07.08
வெற்றி இலக்கங்கள் 04 16 19 30 C

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல: 3335 திகதி: 2020.07.08
வெற்றி இலக்கங்கள் 21 28 46 59 N
32,498,937.50

# நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலய படுகொலை

# நினைவேந்தலுக்கு தடைவிதிக்கக்கோரி தாக்கல் செய்த மனு நிராகரிப்பு

(யாழப்பாணம்)

யாழ்ப்பாணம் நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்திற்கு செல்வதற்கு எம். கே.சிவாஜிலிங்கத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்று மானிப்பாய் பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை மல்லாகம் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

நேற்று (புதன்கிழமை) மேற்கொள் ளப்பட்ட விசாரணையின் போதே குறித்த கோரிக்கை நிராகரிக் கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளை மீள உருவாக்க முற்படுகின்றமை, சென்பீற்றர்ஸ் தேவாலயத்திற்கு முன்பாக 150 இற்கும் அதிகமானவர்களை திரட்டி ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளமை போன்ற தகவல்கள் தமக்கு கிடைத்துள்ளதாக தெரிவித்து மானிப்பாய் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

அதேவேளை அவரை அங்கு செல்வதற்கு தடை விதிக்கவேண்டும் என்றும் கோரியிருந்தனர். இந்நிலையில் நேற்றைய தினம் மல்லாகம் நீதிமன்றில் முன்னிலையான சிவாஜிலிங்கம் தாம் ஆர்ப்பாட்டம் எதுவும் செய்யப்போவதில்லை எனவும் பொலிஸார் மன்றில் கூறியது போன்று எந்த நடவடிக்கையிலும் தாம் ஈடுபடப் போவதில்லை என கூறினார். அதனை அடுத்து பொலிஸார் மன்றில் முன் வைத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தது.

கடந்த 1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09ஆம் திகதி நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம் மற்றும் அருகில் உள்ள முருக மூர்த்தி ஆலயம் மீது விமானப் படையினர் வீசிய குண்டு வீச்சில் 65 பொதுமக்கள் கொல்ல ப்பட்டனர். 150 க்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.

கொல்லப்பட்ட பொது மக்களின் நினைவாக இன்று வியாழக்கிழமை காலை முருகமூர்த்தி ஆலயத்திலும், மாலை தேவாலயத்திலும் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்று, கொல்லப்பட்டவர்களுக்கு நினைவஞ்சலியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03,18)


## சிறுநீரகம் தேவை

44 வயது நபருக்கு O+ குருதி வகை உடைய சிறுநீரகம் தேவை.
(சன்மானம் வழங்கப்படும்)

தொடர்புக்கு
076 395 6263
076 877 3780

## வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியிலுள்ள எமது நிறுவனத்திற்கு
1. மின் பொருத்துனர், பிளம்பர் (நாட்சம்பள அடிப்படையில்)
2. பகுதிநேர மேற்பார்வையாளர் (கட்டிடம், தோட்டம்)
(35 வயதிற்கும் 50 வயதிற்கும் இடையில்)
திருநெல்வேலி, யாழ். நகரை அண்மித்துவசிப்பவர்கள்.

தொடர்பு : 077 953 0496

## H.A.C சித்தன்கேணி

A/L 2022 மாணவர்களுக்கான தொழில்நுட்ப பிரிவு

தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (SFT)
திரு R. சரவணபவன்
B.SC. (Bio technology)

எந்திரவியல் தொழிநுட்பம் (E.Tech.)
திரு K. அருண்குமார்
HND (Mechanical Engineering)

உயிர் முறைமைகள் தொழிநுட்பம் (B.Tech.)
திரு S. சுதர்சன்
B.SC. (Agricultural Technology and Management)

ஆரம்பம் : 11.07.2020 (சனிக்கிழமை)
பிற்பகல் 3 மணி

## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு றொட்டி தயாரிப்பவர், பிறைட் றைஸ், கொத்து வேலை, உணவு பரிமாறுபவர் போன்ற பணி நிலைக்குரிய பணியாளர்கள் தேவை. தகுதியுடையோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு நேரில் வருகை தரவும்.

T.P : 077 649 1027 , 077 940 0963

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு:. றாஜ் - 077 679 6623

## H.A.C சித்தன்கேணி

பிரிவு II
A/L 2022 மாணவர்களுக்கான
கணித, விஞ்ஞானப் பிரிவு

பௌதிகவியல் - திரு. M. ஸ்பெல்மன்
இரசாயனவியல் - திரு. A. நோயல்
திரு. J. உதயன்
உயிரியல் - திரு. S. தயாபரன்
இணைந்த கணிதம் - திரு. T. விஜயேந்திரன்
ICT - திரு. S. விதுஷன்

ஆரம்பம் : 11.07.2020 (சனிக்கிழமை)
காலை 8.00 மணி

குறிப்பு :- பிரிவு I வகுப்புக்கள் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்

## மொடேண் - சண்டிலிப்பாய்

A/L - 2022
புவியியல் N-BABU
(வியாழன், வெள்ளி - 4 pm)
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

T.P : 077 936 5087

## காணி விற்பனை

பலாலி வீதி, ராஜா பிளாசா அருகாமையில் உள்ள ஒழுங்கையில், Water Board காணி முன்பாக, காணி விற்பனைக்குண்டு. இன்னும் 4 பரப்பு மீதியாக உண்டு. பிரித்துக் கொடுக்கப்படும். பரப்பு 20 இலட்சம்.

தொடர்புக்கு 077 325 9934

COVID-19 க்கு பின் நேரடி வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன
புதிய பிரிவு ஆரம்பம் 10/7/2020 (Fri) 9 am

வெளிநாடு செல்வோருக்கான விசேட மொழி வகுப்புக்கள்

DMI COMPUTER EDUCATION

- German — Germany, Swis நாட்டுக்குச் செல்வோருக்கான Deutsch வகுப்புக்கள்
- French — France நாட்டுக்குச் செல்வோருக்கான French வகுப்புக்கள்
- Dutch — Netherland செல்வோருக்கான Dutch வகுப்புக்கள்
- IELTS - Life skills — DMI British Council
- Student Visa — IELTS A1, B1
- சிங்கள மொழி வகுப்புக்கள்

Hot line :- 0777 17 35 17

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, ... 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

## காப்புறுதித் துறையில் வாழ்க்கையை மாற்றும் ஒரு கூட்டிணைவை ஆரம்பித்திடுவோம்

தொடர்ந்து 7 வருடங்கள் வேலை செய்வதற்கு மிகச்சிறந்த இடம் என்ற (G.P.W) விருதினைப் பெற்ற யூனியன் அஷ்யூரன்ஸ் இருந்து தொழில்வாய்ப்புகள் யாழ்.பிராந்தியம்



- முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி
- உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி

**முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி**
- க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி**
- க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- அடிப்படை கொடுப்பனவு 30,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

உங்களது சுயவிபரக் கோவையினை அல்லது விண்ணப்பங்களை 20.07.2020க்கு முன்னர் sellaiyakiritharan89@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
218, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

UNION ASSURANCE
A JOHN KEELLS COMPANY


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.